இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 143 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 17 – செவ்வாய்க்கிழமை 02 ஜனவரி 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 143 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 17 - Tuesday 02 January 2024 - Chennai 12 Pages ₹ 5.00

## மகாகவி பாரதியின் வாழ்க்கை வரலாற்றை ‘கவிராஜன் கதை’ என எழுதியதைப் போல் - கவிப் பேரரசு வைரமுத்து

# தலைவர் கலைஞரின் வரலாற்றை கவிதையாகத் தர வேண்டும்!

## ‘மகா கவிதை’ நூலை வெளியிட்டு – முதல்வர் மு.க.ஸ்டாலின் அன்பு வேண்டுகோள்!







முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (01.01.2024) சென்னை, காமராசர் அரங்கில் நடைபெற்ற கவிப்பேரரசு வைரமுத்துவின் ‘மகா கவிதை’ நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப. சிதம்பரம், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மன்றத்தின் துணைத் தலைவர் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை, மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கலைஞானி கமல்ஹாசன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜன. 2–**

**மகாகவி பாரதியின் வாழ்க்கை வரலாற்றை ‘கவிராஜன் கதை’ என எழுதியதைப் போல் – கவிப் பேரரசு வைரமுத்து தலைவர் கலைஞரின் வரலாற்றை கவிதையாகத் தர வேண்டும் என்று ‘மகா கவிதை’ நூலை வெளியிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (01.01.2024) சென்னை, காமராசர் அரங்கில் நடைபெற்ற கவிப்பேரரசு வைரமுத்துவின் ‘மகா கவிதை’ நூல் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:–

உரையை தொடங்குவதற்கு முன்பு கவிப்பேரரசுக்கு நான் சொல்ல விரும்புவது, நான் கவிஞனுமல்ல! கவிதை விமர்சகனும் அல்ல! கவிஞராகவும், கலை விமர்சகராகவும் இருந்து கோலோச்சிய தலைவர் கலைஞர் அவர்கள் மட்டும் இன்று இருந்திருந்தால்... ‘மகா கவிதை’ தீட்டிய கவிப்பேரரசு வைரமுத்து அவர்களை உச்சிமுகர்ந்து பாராட்டி இருப்பார்.

**கலைஞரின் பாராட்டு மழையில் நனைந்தவர் கவிப்பேரரசு!**

பொதுவாக ஒரு கவிஞர், இன்னொரு கவிஞரைப் பாராட்ட மாட்டார். அப்படியே பாராட்டினாலும், கொஞ்சம் குறை சொல்லித்தான் பாராட்டுவார்கள். ஆனால், தலைவர் கலைஞரைப் பொறுத்தவரை, அழகிய தமிழாக இருந்தால், தன்னை அசத்திய தமிழாக இருக்குமானால், உள்ளிருந்து பாராட்டுவார், மிச்சம் வைக்காமல் பாராட்டுவார்! அப்படி கலைஞரின் பாராட்டு மழையில் நனைந்தவர்தான் நமது கவிப்பேரரசு அவர்கள்! இந்த ‘கவிப்பேரரசு’ என்ற பட்டமே தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியதுதான்!

முதன்முதலாக, 1989–ஆம் ஆண்டு ‘எல்லா நதியிலும் என் ஓடம்’ என்ற புத்தகத்தை தலைவர் கலைஞர் அவர்களை வைத்து வெளியிட்டார் நம்முடைய வைரமுத்து அவர்கள். ‘எல்லா நதியிலும் என் ஓடம்’ என்று அவர் சொல்லிக் கொண்டாலும், அது எப்போதும் வந்து சேரும் கடலாக கலைஞர் அவர்கள்தான் இருந்தார்! இதுதான் வைரமுத்து அவர்களுக்கு இருக்கும் சிறப்பும் பெருமையும்!

**வைரமுத்துவின் 15 நூல்களை வெளியிட்டவர் கலைஞர்!**

வைரமுத்து அவர்கள் எழுதிய 15 நூல்களை வெளியிட்ட கைகள் கலைஞர் அவர்களுடைய கைகள். இது அவர்கள் இருவருக்கும் இருந்த நட்புக்குப் பெருமை!

பாசமிகு கவிப்பேரரசு அவர்களே... இந்த நேரத்தில் உங்களிடம் ஓர் அன்பான ஒரு வேண்டுகோளை வைக்க நினைக்கிறேன். மகாகவி பாரதியின் வாழ்க்கை வரலாற்றை ‘கவிராஜன் கதை’ என்ற தலைப்பில்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

## பன்னாட்டு விமான நிலையத்தில் புதிய முனையம் திறப்பு!

# பிரதமர் மோடி இன்று திருச்சி வருகை!

## விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பு!

**திருச்சி, ஜன.2-**

**திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் புதிய முனையத்தை பிரதமர் மோடி அவர்கள் இன்று (ஜன.2) திறந்து வைத்து உரையாற்றுகிறார்.**

**இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று உரையாற்றுகிறார்.**

திருச்சி சர்வதேச விமான நிலையத்தை தரம் உயர்த்தி புதிய விமான நிலைய முனையம் கட்ட இந்திய விமான நிலைய ஆணைய குழுமம் ரூ.951 கோடி ஒதுக்கீடு செய்தது.

இதனை தொடர்ந்து கடந்த 2019–ஆம் ஆண்டு முதல் கட்டுமானப் பணிகள் தொடங்கின. இந்த நிலையில் கூடுதலாக ரூ.249 கோடி செலவு செய்து கட்டுமானப் பணிகள் ரூ.1200 கோடியில் நிறைவு பெற்றுள்ளது.





இந்த புதிய முனையம் 60,723 சதுர மீட்டர் பரப்பளவில் 2 அடுக்குகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒரே நேரத்தில் 4000 சர்வதேச பயணிகள், 1500 உள்நாட்டுப் பயணிகளை கையாள முடியும். இந்திய கலாச்சாரம், பாரம்பரியத்தை உணர்த்தும் கலை நயத்துடன் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள புதிய முனையம் திறப்பு விழா இன்று (2–ஆம் தேதி) நடைபெறுகிறது.

இதில் பிரதமர் மோடி அவர்கள் கலந்து கொண்டு புதிய முனையத்தை திறந்து வைப்பதுடன், பல்வேறு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டங்களை தொடங்கிவைக்கிறார்.

இந்த விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் முக்கியப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்கின்றனர்.

மேலும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவும் அன்றைய தினம் நடைபெறுகிறது. இந்த விழாவிலும்பிரதமர் மோடி அவர்கள் கலந்துகொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிப் பேசுகிறார்.

இதைத் தொடர்ந்து திருச்சி சர்வதேச விமான நிலையத்துக்குச் செல்லும் பிரதமர் மோடி அவர்கள் அங்கு நடைபெறும் விழாவில் ரூ.1200 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய முனையத்தை திறந்து வைத்து பார்வையிடுகிறார். அப்போது புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டங்களை திறந்து வைக்கிறார்.

---

## வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது!

# 2024-ன் முதல் செயற்கைக்கோள் ‘எக்ஸ்போசாட்!’

## இஸ்ரோ தலைவர் சோம்நாத் பேட்டி!

ஸ்ரீஹரிகோட்டா, ஜன. 2–

புத்தாண்டு தினமான நேற்று (ஜனவரி 1) இஸ்ரோவின் எக்ஸ்போசாட் செயற்கைக்கோள் பி.எஸ்.எல்.வி. சி58 ராக்கெட் மூலம் காலை 9.10 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டு வெற்றிகரமாக அதன் சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.

இதனை அறிவித்த இஸ்ரோ தலைவர் சோம்நாத், ”புத்தாண்டு தொடங்கியது. எக்ஸ்போசாட் வெற்றிகரமாக விண்ணில் நிர்ணயிக்கப்பட்ட சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது என்று தெரிவித்தார்.

இதன் மூலம் உலகிலேயே அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக கருந்துளைகள், நியூட்ரான் பற்றி ஆராய பிரத்யேக செயற்கைக் கோளை கொண்ட 2வது நாடு என்ற தகுதியை இந்தியா பெற்றுள்ளது.

விண்வெளியில் உள்ள புற ஊதாக்கதிர்கள், அங்கு பரவும் எக்ஸ்ரே கதிர்கள் இயக்கம் மற்றும் நட்சத்திரங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) சார்பில் அஸ்ட்ரோசாட் செயற்கைக் கோள் 2015ம் ஆண்டில் அனுப்பப்பட்டது.

இந்நிலையில், கருந்துளை, நியூட்ரான் நட்சத்திரங்கள் போன்ற வானியல் நிகழ்வுகளை இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்வதற்காக எக்ஸ்போசாட் (XPoSatXray Polarimeter Satellite) எனும் அதி நவீன செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்தது.

எக்ஸ்போசாட் 469 கிலோ எடை கொண்டது. இதன் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும். இது பூமியில் இருந்து சுமார் 650 கி.மீ உயரத்தில் நிலைநிறுத்தப்பட்டு ஆய்வுகள் செய்யப்பட உள்ளன. இதற்காக எக்ஸ்பெக்ட் (எக்ஸ்ரே ஸ்பெக்ட்ரோகிராபி), போலிக்ஸ் (எக்ஸ்ரே போலரிமீட்டர்) ஆகிய 2 சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

ராக்கெட் ஏவுதலுக்கான 25 மணி நேர கவுன்ட்டவுன் நேற்று முன்தினம் காலை 8.10 மணிக்கு தொடங்கியது. தொடர்ந்து ராக்கெட்டில் எரிபொருள் நிரப்புதல் உட்பட இறுதிகட்ட பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து இந்த செயற்கைக் கோள் பி.எஸ்.எல்.வி. சி58 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டா வில் உள்ள ஏவுதளத்தில் இருந்து புத்தாண்டு தினமான நேற்று (ஜனவரி 1) காலை 9.10 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது. ஒவ்வொரு படிநிலையாக ராக்கெட்டை விண்ணில் நிலைநிறுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

**பல்வேறு அம்சங்களை ஆராயும்!**

இவை விண்வெளியில் பரவும் எக்ஸ்கதிர்களின் துருவ முனைப்பு அளவு மற்றும் கோணத்தை அளவிடுதல், நியூட்ரான்நட்சத்தி ரத்தில் இருந்து வெளிப்படும் கதிரியக்கம், கருந்துளை வாயுக்களின் நெபுலா உட்பட பல்வேறு அம்சங்களை ஆராயும்.

மேலும், ஒரே நேரத்தில் எக்ஸ் கதிர் மூலங்களின் நிறமாலை மற்றும் துருவப்படுத்தல் செயல்பாடுகளையும் ஆய்வு செய்ய முடியும். இந்த தரவுகள்,பிரபஞ்சத்தின் செயல்பாடு தொடர்பான பல்வேறு கேள்விகளுக்கு விடையளிக்கும் என இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

---

# வெள்ளம் பாதித்த மாவட்டங்களுக்கு ரூ. 1000 கோடி நிவாரண உதவி பாராட்டுக்குரியது !

## முதல்வர் அறிவிப்புக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வரவேற்பு !

சென்னை. ஜன. 2-

கனமழை வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மாவட்டங்களுக்கு தமிழக அரசின் நிதியிலிருந்து கூடுதலாக ரூ. 1000 கோடி நிவாரண உதவி ஒதுக்கியதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கே.பாலகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

வரலாறு காணாத மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்ட மக்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ஏற்கனவே பல்வேறு நிவாரண உதவிகள் அறிவிக்கப்பட்டு வழங்கி வரும் நிலையில் தற்போது கூடுதலாக தமிழக அரசின் நிதியிலிருந்து ரூ. 1000 கோடி நிவாரண உதவிகள் வழங்கப்படும் என முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

ஒன்றிய அரசு நிதி ஏதும் வழங்காத நிலையில் முதலமைச்சரின் இந்த அறிவிப்பு பாராட்டுக்குரியது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு இதனைவரவேற்கிறது. மிக்ஜம் புயலால் சென்னை மற்றும் அருகாமை மாவட்டங்கள் கடுமையான பாதிப்புகளைச் சந்தித்தன. இந்த பாதிப்புகளிலிருந்து மீள்வதற்குள் தென்மாவட்டங்களில் பெய்த அதி கனமழையின் காரணமாக தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் பெரும் பாதிப்புகளுக்குள்ளாகின. அனைத்தையும் இழந்து மக்கள் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டனர். தமிழக அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட துரித நடவடிக்கைகள் மற்றும் நிவாரண உதவிகள் மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப பேருதவியாக அமைந்தன. ஒன்றிய அரசு, தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று கூடுதல் நிதி ஒதுக்கும் பட்சத்தில் நிவா ரண உதவிகளை, உதவித் தொகைகளை மேலும் அதிகரித்திட வாய்ப்புகள் ஏற்படும்.

**ஒரு ரூபாய் கூட ஒதுக்காத மோடி அரசு!**

தமிழக முதலமைச்சர், பிரதமரை நேரில் சந்தித்து வெள்ளப்பாதிப்புகளுக்கு நிவாரணம் மற்றும் மறு கட்ட மைப்பு பணிகளை சீர் செய்திட ரூ. 21 ஆயிரம் கோடி தேசிய பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ஒதுக்கிட வேண்டுமென வலியுறுத்தினார். ஆனால், இதுகாறும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழகத்திற்கு ஒரு ரூபாய் கூட ஒதுக்காமல் தமிழகத்தையும், தமிழக மக்களையும் வஞ்சித்து வருகிறது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழகத்தின் மீது கொண்டுள்ள வஞ்சகப் போக்கை கைவிட்டு, வெள்ளப் பாதிப்புகளுக்கு தமிழ்நாடு அரசு கோரியுள்ள ரூ. 21 ஆயிரம் கோடி நிதியினை உடனடியாக வழங்கிட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வலியுறுத்துகிறது. இந்த கோரிக்கையை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஜனவரி 3 அன்று சென்னையில் சாஸ்திரி பவன் முன்பு நடைபெறும் முற்றுகைப் போராட்டத்திற்கு அனைத்துத் தரப்பு மக்களும், ஜனநாயக இயக்கங்களும் கலந்து கொண்டு பேராதரவு அளிக்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள் விடுக்கிறது.

---

## தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (8)

## ஜனவரி 3 - அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, 2023 ஜீன் 3 முதல், ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று “முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, ஜனவரி 3 புதன் கிழமை முரசொலி சிறப்பிதழ், “கல்வியாளர்கள் பார்வையில் கலைஞர்” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 02-01-2024

# யாருடைய பணம் இது?

கவுண்டமணி - செந்தில் வாழைப்பழக் காமெடியைப் பார்த்தது தமிழ்நாடு.

'ஒரு பழம் இங்க இருக்கு... இன்னொரு பழம் எங்க?' என்று கேட்பார் கவுண்டமணி.

'அது தான்ணே இது' என்பார் செந்தில்.

ஒன்றிய அரசிடம் நிதி கேட்டால், 'நீங்கள் செலவு செய்யும் பணம் எல்லாம் எங்கள் பணம் தான்' என்று சொல்கிறார்கள். மாநில அரசுகளிடம் இருந்து பணத்தை வசூலித்து எடுத்துச் செல்லும் ஒன்றிய அரசு, மாநில அரசுக்கு அள்ளியும் தருவது இல்லை, கிள்ளியும் தருவது இல்லை. ஆனால் எள்ளி மட்டும் நகையாடுகிறது.

**சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தற்காலிக நிவாரணத் தொகையாக 7,033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12,659 கோடி ரூபாயும் முதலமைச்சர் அவர்கள் கோரி உள்ளார்கள். திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் இன்னும் முழுமையாக அளவிடப்படவில்லை. எனவே, அவசர நிவாரண நிதியாக 2 ஆயிரம் கோடி ரூபாய் தரவேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் கோரியுள்ளார்கள். ஆக மொத்தம் 21 ஆயிரத்து 692 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசால் ஒன்றிய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. இந்த பணத்தை அவர்கள் தரத் தயாராக இல்லை.**

**அதற்காக மக்களை காத்திருக்க வைக்க முடியுமா? சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 6 ஆயிரம் ரூபாயை குடும்ப அட்டை அடிப்படையில் தரச் சொல்லிவிட்டார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதற்கு மட்டும் 1,486 கோடி ரூபாயை மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இது 24 லட்சத்து 25 ஆயிரம் குடும்பங்களுக்கு பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளது.**

புயல் மழையால் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், அரசு மருத்துவமனைகள், டிரான்ஸ்பார்மர்கள், மின் கம்பங்கள், பழுதடைந்த துணை மின் நிலையங்கள் குடிநீர் தொட்டிகள், தெருவிளக்குகள், கிராமச் சாலைகள் ஆகியவற்றை சீர் செய்திட வேண்டும். அதற்கும் நிதி அதிகம் தேவைப்படுகிறது. பொதுமக்களின் இழப்புகளுக்கு நிதி வழங்க வேண்டும். இவை எதையும் மனதில் கொள்ளவில்லை ஒன்றிய அரசு. ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 6000 ரூபாய் கொடுத்தது, இது மோடி பணம் தான் என்று வஞ்சகப் பொய்யை அவிழ்த்து விடத் தொடங்கிவிட்டார்கள்.

**24 லட்சம் பேருக்குக் கொடுங்கள் என்று ரூ.1,486 கோடியை ஒன்றிய அரசு கொடுத்திருந்தால்தான் அது மோடி பணம். தமிழ்நாடு அரசு தனது கருவூலத்தில் இருந்து எடுத்துத் தரும் பணம் எப்படி மோடி பணம் ஆகும்? இது மோசடித் தனம் அல்லவா?**

**நமக்கு முதலில் ரூ.450 கோடியும், பின்னர் ரூ.450 கோடியும் ஒன்றிய அரசு வழங்கி இருக்கிறது. இவை இரண்டும் மிக்ஜாம் புயல் பாதிப்புகளுக்காகத் தரப்பட்ட சிறப்பு நிதி அல்ல. வழக்கமாக பேரிடர் காலங்களில் தருவதற்காக வைத்திருக்கும் நிதியில் இருந்து எடுத்துத் தந்துள்ளார்கள். இவை ஏற்கனவே ஒதுக்கி வைக்கப்பட்டு இருக்கும் நிதி தானே தவிர - டிசம்பர் 4,17,18 ஆகிய தேதிகளில் ஏற்பட்ட பாதிப்புகளுக்காகத் தரப்பட்ட நிதி அல்ல. அல்ல.**

*2015 முதல் 2021 வரை ஒன்றிய அரசிடம் கோரப்பட்ட மற்றும் ஒன்றிய அரசால் விடுவிக்கப்பட்ட தொகை விபரம்*

| ஆண்டு | இயற்கை பேரிடர் | ஒன்றிய அரசிடம் கோரப்பட்ட தொகை (ரூ.கோடியில்) | | | ஒன்றிய அரசு வழங்கிய தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|---|
| | | தற்காலிக நிவாரணம் | நீண்ட கால சீரமைப்பு | மொத்தம் | |
| 2015-16 | வெள்ளம் | 7959.93 | 17952.52 | 25912.45 | 1737.65 |
| 2016-17 | வறட்சி | - | - | 39565.00 | 1748.28 |
| 2016-17 | வார்தா புயல் | 1972.89 | 20600.37 | 22573.26 | 266.17 |
| 2017-18 | கனமழை | 876.00 | 8426.00 | 9302.00 | 133.00 |
| | ஒகி புயல் | | | | |
| 2018-19 | கஜா புயல் | 2709.00 | 15190.17 | 17899.17 | 1146.12 |
| 2020-21 | நிவர் புயல் | 650.10 | 3108.55 | 3758.65 | 63.14 |
| | புரெவி புயல் | 485.00 | 1029.00 | 1514.00 | 223.77 |
| | ஜனவரி 2021 - கனமழை | 734.49 | 166.33 | 900.82 | 213.51 |
| 222021- | கன மழை மற்றும் வெள்ளம் | | | | |
| | முன்மொழிவு 1 | 549.63 | 2079.66 | 2629.29 | 352.85 |
| | முன்மொழிவு 2 | 521.29 | 1475.21 | 1996.50 | |
| | முன்மொழிவு 3 | 439.91 | 1164.75 | 1604.66 | |
| | மொத்தம் | 16,898.24 | 71,192.56 | 1,27,655.80 | 5,884.49 |

2015ஆம் ஆண்டு முதல் பேரிடர்களினால் ஏற்பட்ட சேதங்களை தற்காலிகமாக மற்றும் நிரந்தரமாக சீரமைக்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிய மொத்த தொகை ரூ.1,27,655.80 கோடி.

**ஒன்றிய அரசால் ரூ.5,884.49 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிய தொகையில் 4.61 விழுக்காடு மட்டுமே ஆகும். நாம் கொடுக்கும் பணத்தை கார்பரேட் கம்பெனிகளுக்கு கடன் கொடுத்து - அவர்களுக்கு திவால் நோட்டீஸும் கொடுத்து அழகு பார்ப்பதுதான் பா.ஜ.க.வுக்கு தெரிந்த ஒரே வேலை. இதை தலையாட்டிக் கொண்டு செய்வதற்காகத் தான் நிர்மலா சீதாராமன் நிதி அமைச்சராக ஆக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு உள்பட அனைத்து மாநில நிதி ஆதாரங்களும் சுரண்டப்பட்டு சுருட்டப்படுகின்றன என்பது மட்டுமே உண்மை ஆகும். இத்தகைய கார்ப்பரேட் முதலைகள் வேண்டுமானால், 'இது மோடி பணம்' என்று சொல்லிக் கொள்ளலாம்.**

வாழைப்பழக் காமெடி வந்த படம் 'கரகாட்டக்காரன்'. இவர்களோ பித்தலாட்டக்காரர்கள்!




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (01.01.2024) சென்னை, காமராசர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், கவிப்பேரரசு வைரமுத்துவின் "மகா கவிதை" நூலினை வெளியிட, ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மன்றத்தின் துணைத் தலைவர் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை, மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கலைஞானி கமல்ஹாசன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### 2030-க்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம்:

# உலக முதலீட்டாளர் மாநாட்டில் செயல்திட்டம் வெளியிட தமிழ்நாடு மும்முரம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஜன.2-

2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை எய்துவதற்கான செயல் திட்டத்தை உலக முதலீட்டாளர் மாநாட்டில் வெளியிட தமிழ்நாடு மும்முரமாகிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**உலக முதலீட்டாளர் மாநாடு - 2024 தொடங்க இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் அது குறித்த ஆர்வம் மென்மேலும் பெருகி வருகிறது.**

**2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் ஆவதற்கான செயல்திட்டத்தை உலக முதலீட்டாளர் மாநாட்டில் வெளியிடத் தமிழ்நாடு மும்முரமாகிறது.**

**தமிழ்நாட்டின் துடிப்புமிகுந்த தொழிற்சூழலை வெளிக்காட்டும் பிரம்மாண்டமான மாநாட்டில் வரும் ஜனவரி 7, 8 தேதிகளில் இணைந்திடுங்கள்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### உலகெங்கும் வாழும் தமிழ் உறவுகளைப் புதுப்பிக்கும்

# 'வேர்களைத் தேடி' திட்டம் துவக்கம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜன. 2-

உலகெங்கும் வாழும் தமிழ் உறவுகளை புதுப்பிக்கும் "வேர்களைத் தேடி" திட்டம் துவக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

அயலகத்தில் வாழும் தமிழர்களின் நலன் காக்கவும், அயலகத்திற்கு தமிழ்நாட்டில் இருந்து கல்வி, வேலை வாய்ப்புகள் என்று இடம் பெயரும் தமிழர்களை பாதுகாப்பாக வழிநடத்தவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுடன் "அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை" செயல்பட்டு வருகிறது.

அயலகத் தமிழ் உறவுகளை ஒன்றிணைக்கும் முகமாக தமிழ்நாடு அரசு "அயலகத் தமிழர் தினம்" எனும் சிறப்பு தினத்தை அறிவித்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய நாட்களில் கடந்த இரண்டு ஆண்டுகளாக சென்னையில் பிரமாண்டமாக கொண்டாடி வருகிறது.

அயலகத் தமிழர்களின் கலாச்சார உறவுகளை மேம்படுத்துவதின் ஒரு நகர்வாக பல தலைமுறைகளுக்கு முன்பு அயலகம் இடம்பெயர்ந்து அங்கு வாழும் அயலகத்தமிழர்களின் குழந்தைகளுக்காக வேர்களைத்தேடி" என்றொரு பண்பாட்டுப்பயணத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இத்திட்டம் மூலம் அயலகத்தில் வாழும் 18 முதல் 30 வயதுக்குட்பட்ட தமிழர்களின் இளைஞர்களை தமிழ்நாடு அரசு செலவில் தமிழ்நாட்டிற்கு வரவழைத்து அவர்கள் தமிழ் மற்றும் தமிழர்தம் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்று சிறப்பு மிக்க இடங்களுக்கு ஒரு பண்பாட்டு பயணம் ஏற்பாடு செய்ய உத்தரவிட்டிருந்தார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதனடிப்படையில் வேர்களைத் தேடி திட்டத்தின் முதல் பயணம் டிசம்பர் 27 ஆம் தேதி காலை 8 மணி அளவில் மகாபலிபுரத்தில் உள்ள தமிழ்நாடு ஹோட்டலில் இருந்து பயணம் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அயலகத் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி. கே.எஸ். மஸ்தான் இப்பண்பாட்டு பயணத்தை துவக்கி வைக்கிறார். தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் கிருஷ்ணமூர்த்தி ஐ ஒ எப் எஸ் முன்னிலை வகிக்கிறார்.

இப்பண்பாட்டு பயணத்திற்காக ஆஸ்திரேலியா, கனடா, பிஜி இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து 58 இளைஞர்கள் தேர்வாகி தமிழ்நாடு அரசு செலவில் சென்னை வந்தடைந்துள்ளனர்.

மேலும் சென்னையில் இருந்து மகாபலிபுரம், தஞ்சாவூர், சிவகங்கை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, திருச்சி, செஞ்சிகோட்டை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களுக்கு பயணித்து தமிழர்களின் கட்டிடக்கலை, சிற்பக்கலை, இயல், இசை, நாட்டியம்,சிற்பம், ஓவியம், சுதந்திரபோராட்ட வரலாறு, பல்வேறு தமிழ் இலக்கிய வரலாறு ஆகியவற்றை அறிந்துகொள்வார்கள். இத்துடன் தமிழ் அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்களுடன் கலந்துரையாடல்களும் பயிற்சி வகுப்புகளும் இடம் பெறுகின்றன.

இந்த இருவார பயணத்தின் மூலம் தமிழர்களின் கலாச்சாரம், வரலாறு, மொழியியல் உட்பட பல்வேறு திறன்களை கற்றுணர்வார்கள் மூன்றாவது ஆண்டாக அயலகத்தமிழர்கள் தினம் வரும் ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் சென்னையில் உள்ள நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் பிரமாண்டமாக நடைபெறுகிறது. இவ்விழாவில் இந்த இளைஞர்கள் பங்கேற்று தங்களின் அனுபவங்களை பகிர்ந்துகொள்வார்கள்.

மேலும் தங்கள் நாடுகளுக்கு சென்று தமிழர்களின் கலாச்சாரதூதுவர்களாகவும் செயல்பட ஊக்கம்பெறுவார்கள்.

தொடர்புக்கு: செண்பகவள்ளி : 6382067900, சத்தியா: 9600153394, ராஜ்மோகன்: 9551546616.

இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளது.

# மோகனூர் பேரூராட்சியில் ரூ.22.77 கோடி மதிப்பில் புதிய குடிநீர்த் திட்டம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தகவல்!

நாமக்கல், ஜன. 2 -

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி, ரூ. 22.77 கோடி மதிப்பில் மோகனூர் பேரூராட்சியில் புதிய குடிநீர் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் என நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி முதல் 29 ஆம் தேதி வரை 10 நாட்கள் 13 அரசுத்துறை சார்ந்த அலுவலர்களைக் கொண்டு 39 முகாம்கள் நடத்தப்பட்டு பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளது. மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் பல்வேறு சேவைகள் பெறும் வகையில் பொது மக்களால் வழங்கப்பட்ட கோரிக்கை மனுக்களுக்கு 30 நாட்களுக்குள் தீர்வு



காணும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அதன்படி கடந்த 29 ஆம் தேதி மோகனூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு முத்துராஜா தெரு மாசடச்சிஅம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் மாநிலங்களவை உறுப்பினருமான கே. ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வு மேற்கொண்ட பின் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி பேசும் போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மக்களின் குடிநீர் தேவை அடிப்படையாக கருதி உடனடி நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார். அதன்படி மோகனூர் பேரூராட்சிக்கு புதிதாக மல்லம்பாளையம் என்ற இடத்தில் மூன்று எண்ணிக்கையிலான நீர் உறிஞ்சி கிணறுகள் மற்றும் மூன்று மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் மற்றும் பகிர்மான குழாய்கள் புதிதாக அமைத்து காவேரி கரையில் அமைந்துள்ள மோகனூர் பேரூராட்சி பகுதிகளுக்கு சீராக குடிநீர் விநியோகம் வழங்கும் வகையில் ரூ. 22.77 கோடி மதிப்பில் பணிகள் விரைந்து தொடங்கப்பட்டு நடைபெற உள்ளது என தெரிவித்தார்.

அங்கன்வாடி மைய கட்டடங்கள்!

இதை தொடர்ந்து நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், அரூர், ஆண்டாபுரம், இராசிபாளையம் மற்றும் சின்ன பெத்தாம்பட்டி ஆகிய ஊராட்சிகளில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில், ரூ.52.36 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 4 புதிய அங்கன்வாடி மைய கட்டடங்கள் திறப்பு விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் முன்னிலை வகித்தார்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், அரூர் ஊராட்சியில், ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம், ஆண்டாபுரம் ரூ.12.61 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம், இராசிபாளையம் ஊராட்சியில் ரூ.12.61 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம், சின்ன பெத்தாம்பட்டிஊராட்சியில் ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம் என 5 புதிய அங்கன்வாடி மையங்களில் புதிய வகுப்பறைகள், சமையலறை, கழிப்பிடவசதி மற்றும் குடிநீர்வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கொண்ட அங்கன்வாடி மையங்களை மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சிவக்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் குமார், அட்மா குழுத்தலைவர் நவலடி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கழக இளைஞர் அணி சார்பில் ‘முரசொலி’ பாசறையில் வெளிவரும் கட்டுரைகளைத் தொகுத்து நூல்கள்!

# முத்தமிழறிஞர் பதிப்பகம் தொடக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று 9 நூல்களை வெளியிடுகிறார்!

சென்னை, ஜன. 2-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று சென்னையில் முத்தமிழறிஞர் பதிப்பகத்தை தொடங்கி வைத்து, பதிப்பகம் சார்பில் 9 நூல்களையும் வெளியிடுகிறார்.**

**முதலமைச்சரின் இல்லத்தில் இன்று மதியம் நடைபெறும் இந்நிகழ்ச்சியில், இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், புத்தக ஆசிரியர்கள், பதிப்பக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.**

கழக இளைஞர் அணி சார்பில், கடந்த ஆண்டு (2023) ஜனவரி தமிழர் திருநாளுக்கு முன்தினம் முதல் தினம் ஒரு தொடர் கொண்ட ‘பாசறை’ பக்கம் முரசொலியில் வெளிவந்து கொண்டிருக்கிறது. அத்துடன் ஓவிய வடிவில், ‘திராவிடத்தால் வாழ்கிறோம்’ என்கிற தலைப்பில் திராவிட இயக்க வரலாறு பற்றி வெளியிடப்பட்டு வருகிறது.

### முரசொலி பாசறை பக்கம் ஓராண்டு நிறைவு!

இவ்வாறு பாசறை பக்கம் வெளியாகத் தொடங்கி ஏறத்தாழ ஓராண்டு நிறைவடைவதையொட்டி, அவைகளில் வெளியான கட்டுரைகளைத் தொகுத்து ஒன்பது நூல்களாக வெளியிடப்படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் ‘**கலைஞரும் நானும்**’ என்கிற தலைப்பில் வாரம் ஒரு நாள் கட்டுரை எழுதி வருகின்றனர்.




### கலைஞர் ஆட்சியில் செயல்படுத்திய திட்டங்கள்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமது ஆட்சியில் செயல்படுத்தி வந்த திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து ‘**இடம் பொருள் கலைஞர்**’ என்னும் தலைப்பில் வாரம் ஒரு நாட்கள் கட்டுரை இடம் பெற்று வருகிறது.

‘**திராவிடப் போராளிகள்**’ என்ற தலைப்பில், திராவிட இயக்க வீராங்கனைகளை பற்றி திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ள நிலையில் அந்தத் தியாகச் சுடர்கள் குறித்து வாரம் ஒருநாள் வழக்கறிஞர் அருள்மொழி கட்டுரை எழுதி வருகிறார்.

‘**டாக்டர் கலைஞர்**’ என்கிற தலைப்பில், மருத்துவத் துறையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய மகத்தான பங்கு குறித்து வாரம் ஒரு நாள் டாக்டர் எழிலன் எம்.எல்.ஏ. கட்டுரை எழுதியுள்ளார்.

திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூக நீதிச் சிந்தனைகளை திரைத்துறை மூலம் மக்களிடம் எவ்வாறெல்லாம் எடுத்துச் செல்லப்பட்டது என்பது குறித்து ‘**திராவிட சினிமா**’ என்ற தலைப்பில் வீ.மா.ச. சுபகுணராஜன் வாரம் ஒரு நாள் கட்டுரை எழுதி வருகிறார்.

### திராவிட மாடல் அரசின் திட்டங்கள்!

‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதி மொழி எடுத்துக் கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டு வளர்ச்சியை மையமாகக் கொண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வரும் திட்டங்கள் பற்றி விரிவாக, விளக்கமாக ‘**திராவிட மாடல் அரசு**’ என்ற தலைப்பில் வாரம் ஒரு கட்டுரை இடம் பெற்று வருகிறது.

அடுத்து, ‘**திராவிடத்தால் வாழ்கிறோம்**’ என்ற தலைப்பில் திராவிட இயக்கத் தலைவர்கள் பற்றி ஓவிய வடிவில் கருத்தோவியம் தினமும் இடம் பெற்று வருகிறது. அவைகள் இரண்டு தொகுப்புகளாக தொகுக்கப்பட்டுள்ளன.

### உடன்பிறப்பே என்ற தலைப்பில் கட்டுரைகள்!

தி.மு.க. கோட்டையை கட்டி எழுப்பி, இயக்க வரலாற்றில் இடம் பெற்ற, தீரர்கள் பற்றி வாரம் ஒரு நாள் ‘**உடன்பிறப்பே**’ என்ற தலைப்பில் பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோருடன் பயணித்தவர்கள் பற்றி கட்டுரை வெளியாகி வருகிறது.

இந்தக் கட்டுரைகள் யாவும் முறைப்படி தொகுக்கப்பட்டு, 9 புத்தகங்களாக, ‘**உடன் பிறப்பே**’, ‘**திராவிடத்தால் வாழ்கிறோம்’ (இரண்டு தொகுப்புகள்) ‘டாக்டர் கலைஞர்**’, ‘**திராவிட சினிமா**’, ‘**திராவிட மாடல் அரசு**’, ‘**திராவிடப் போராளிகள்**’, ‘**இடம் பொருள் கலைஞர்**’ மற்றும் ‘**கலைஞரும் நானும்**’ என்கிற தலைப்புகளில் 9 நூல்கள் இன்று வெளியிடப்படுகின்றன.

‘முத்தமிழறிஞர் கலைஞர்’ பெயரிலான பதிப்பகம் அந்நூல்களை வெளியிடுகின்றன.

### முதல்வர் இல்லத்தில் நிகழ்ச்சி நடைபெறுகிறது!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று மதியம் தமது இல்லத்தில் முத்தமிழறிஞர் பதிப்பகத்தை தொடங்கி, மேற்காணும் 9 நூல்களையும் வெளியிடுகிறார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பாசறை நிர்வாகிகள், கட்டுரையாளர்கள், பதிப்பக நிர்வாகிகள் பங்கேற்கிறார்கள்.

### சென்னை புத்தகக் கண்காட்சியில் விற்பனை!

நாளை (3.1.2024) துவங்க இருக்கும் சென்னை புத்தகக் கண்காட்சியில், இளைஞர் அணி சார்பில் தனி அரங்கு ஒன்று அமைக்கப்பட்டு மேற்காணும் 9 புத்தகங்களும் விற்பனைக்கு வைக்கப்படுகின்றன.

9 புத்தகங்களின் மொத்த விலை ரூ.1950 ஆகும். புத்தகக் கண்காட்சி அரங்கில் 10 சதவிகித கழிவுடன் அவை கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# படைப்புலகத்துக்கு மட்டுமல்ல, பதிப்புலகத்துக்கும் மகுடமாக அமைந்த கவிப்பேரரசின் ‘மகா கவிதை’ நூல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு... முதல் பக்கத் தொடர்ச்சி

எழுதியதைப் போல, தலைவர் கலைஞரின் வரலாற்றை கவிதையாக நீங்கள் தர வேண்டும். இது எனது அன்பான வேண்டுகோள்! உங்கள் தமிழில் கலைஞருக்கு ஒரு கவிதை வரலாறு வந்தாக வேண்டும் என்ற உங்கள் ரசிகனின் வேண்டுகோள், இன்னும்கூட கொஞ்சம் உரிமையோடு சொன்னால், கட்டளை!

### கவிப்பேரரசு எழுதிக் கொண்டே இருக்கவேண்டும்! நான் அதனை வெளியிட்டுக் கொண்டே இருப்பேன்!

தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவாழ்வை எய்திய பிறகு நமது கவிப்பேரரசு அவர்களின் ‘தமிழாற்றுப்படை’ நூலை வெளியிட்டேன்; இப்போது ‘மகா கவிதை’யை வெளியிடும் வாய்ப்பையும் பெற்றுள்ளேன். கவிப்பேரரசு அவர்கள் எழுதிக் கொண்டே இருக்க வேண்டும்; அவற்றை வெளியிடும் வாய்ப்பை நான் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய "மகா ஆசை"!

சில மாதங்களுக்கு முன்பு, என்னை வந்து சந்தித்த கவிப்பேரரசு அவர்கள், இப்படி ஒரு நூலை எழுதி வருவதாகவும், அதனை நான் வந்து வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். பொதுவாக, அவரது படைப்புகள் வார இதழ்களில் வெளியாகும்.

வாரா வாரம் படிக்கும் வாய்ப்பு வாசகர்களுக்கு ஏற்படும். ஆனால் இந்த ‘மகா கவிதை’ என்பது மிக மிக இரகசியமாக இருந்தது. வார இதழ்களில் எழுதப்பட்டது அல்ல இது. எதிலும் வெளியிடப்படாமல் நேரடியாக புத்தகமாக வெளியாகி உள்ளது. எனவே, கவிப்பேரரசு அவர்கள் எதைப் பற்றி எழுதி இருக்கிறார் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. எனது ஆர்வத்தை தணிக்கும் வகையில் வைரமுத்து அவர்களும், அவரது இரண்டு கவிதை வாரிசுகளும் சேர்ந்து வந்து, ‘மகா கவிதை’ நூலை என்னிடம் வழங்கினார்கள்.

### ஒரு வாளை கையில் ஏந்தியது போல் இருந்த நூல்!

அந்தப் புத்தகத்தை வாங்கிய போது, அதுவே மகா புத்தகமாகத்தான் இருந்தது. இன்னும் சொன்னால், ஒரு புத்தகத்தைக் கையில் வைத்திருப்பது போல இல்லாமல், ஒரு வாளைக் கையில் ஏந்தியது போல நீளமாக இருந்தது. படைப்பு தரமாக இருப்பதைப் போல, சிலர் புத்தகங்களைத் தரமாகத் தயாரிப்பது இல்லை. படைப்பும் தரமாக இருந்து, புத்தகத்தையும் அதைவிடத் தரமாகத் தயாரிப்பதில் கவிப்பேரரசு கண்ணும் கருத்துமாக இருப்பார். அந்த வகையில், படைப்புலகத்துக்கு மட்டுமல்ல, பதிப்புலகத்துக்கும் இந்த நூல் மகுடமாக அமைந்துள்ளது.

நிலம் – நீர் – தீ – காற்று – வானம் ஆகிய ஐம்பூதங்களைப் பற்றிய கவிதைத் தொகுப்பு என்பதை நீங்கள் அனைவரும் வாசிக்கும் போது உணர்வீர்கள். "நிலம் – நீர் – தீ – வளி – விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்" என்று சொல்கிறது தொல்காப்பியம். தொல்காப்பியம் தொடங்கிய இடத்துக்கு தமிழ் இலக்கியத்தைக் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறார் கவிப்பேரரசு அவர்கள். பொதுவாக, இந்த ஐம்பூதங்களையும் யாராலும் அடக்க முடியாது என்று சொல்வார்கள். ஆனால் அந்த ஐம்பூதங்களையும் ஒரு கவிஞனால், தமிழ்க் கவிதைக்குள் அடக்க முடியும் என்பதை மெய்ப்பிக்கும் புத்தகம்தான் இந்த மகா கவிதை நூல்!

## ஐம்பூதங்களும் கவிப் பேரரசின் தமிழில் அடங்கிக் கிடக்கின்றன!

### நவீன அறிவியலைச் சொல்லும் திறம் கொண்டது தமிழ்மொழி

மழையைப் பற்றி கவிஞர் சொல்கிறார்... "திரவ ஊசியால் பூமியின் துவாரம் போலும் துளைத்த மழை" – என்கிறார்! அதனைத்தான் நாம் சில வாரங்களுக்கு முன்னால் பார்த்தோம். இதனை விட மழையை விளக்க முடியாது. அடுத்து நீரைப் பற்றிச் சொல்கிறார்... "ஆதியும் நீரே அந்தமும் நீரே தாய்க்குடம் உடைந்து பிறக்கிறோம் தண்ணீர்க் குடம் உடைத்து முடிக்கிறோம்" என்கிறார். "சூரியன்தான் எங்கள் ஒற்றை உயிர் விளக்கு" என்கிறார். "காற்றாகிய நான் ஒருநாள் நஞ்சூட்டப்பட்டால் மொத்த உலகமும் மூச்சழியும்" என்கிறார்.

**சமீபத்தில் ஏற்பட்ட புயல் – மழை – வெள்ளம் ஆகியவை சூழலியல் பிரச்சினைகள் மீது அதிகமான கவனத்தை ஈர்க்கின்றன. அதைப் போலவே கவிப்பேரரசு அவர்களின் மகா கவிதையும் ஐம்பூதங்கள் மீதான அக்கறையை அதிகரிப்பதாக அமைந்துள்ளது. இந்நூலை – கருத்து வாளை, அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கவிதைகளைப் படிப்பதோடு, அதன்படி நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கவிப்பேரரசு அவர்களே! உங்கள் தமிழ்க் கவிதையை தமிழ்நாடு பேசும்! இயற்கை மானுடம் பேசும்! இந்த ‘மகா கவிதை’யை உலகம் பேசும்!**

கனிமம் – தாவரம் – நீர் – நுண்ணுயிர் – விலங்கு – காற்று – வானம் – தீ. அனைத்தும் நிகழ்கால மனிதா! உனக்கல்ல. நீ கால்நடையாய் வந்த ஒரு பயணி. நுகர்ந்தாயா – போய்விடு – என்று வழிகாட்டுகிறார் கவிஞர். இப்படி ஐம்பூதங்களும் கவிஞரின் தமிழில் அடங்கிக் கிடக்கின்றன இந்த நூலில். அறிவியலை – அதுவும் நவீன அறிவியலைச் சொல்லும் திறம் கொண்டது தமிழ்மொழி என்பதை நிரூபிப்பதாகவும் இந்த புத்தகம் அமைந்துள்ளது. வைரமுத்துவின் மொழி ஆளுமை – மொழி ஆற்றல் – இதில் வெளிப்படுகிறது.

மிகமுக்கியமான காலக் கட்டத்தில் இந்த நூலை எழுதி இருக்கிறார் கவிப்பேரரசு. இதற்காக அவரை முதலில் பாராட்ட வேண்டும். புயலும் – மழையும் – வெள்ளமும் தலைநகர் சென்னை முதல் தென் மாவட்ட குமரி வரைக்கும் சுற்றிச் சுழன்றடித்து முடித்திருக்கும் இந்த நேரத்தில் ஐம்பூதங்களைப் பற்றி கவிஞர் எழுதி இருக்கிறார். சென்னையாக இருந்தாலும் – நெல்லையாக இருந்தாலும் வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் அதி கனமழை பெய்யும் என்று சொன்னார்களே தவிர, எவ்வளவு பெய்யும் என்று சொல்லவில்லை.

### 177 ஆண்டுகளிலேயே பெரிய மழையாகப் பெய்த காரணத்தை யாரும் சொல்ல முடியவில்லை!

ஏரி உடைந்ததைப் போல – வானம் உடைந்து கொட்டியதாக மழை பெய்துள்ளது. 100 ஆண்டில் பெரிய மழை. 177 ஆண்டில் பெரிய மழை – என்று சொல்கிறோமே தவிர, இதற்கான காரணம் என்ன என்பதை யாரும் சொல்லவில்லை. உண்மையான காரணத்தை இந்தப் புத்தகத்தில் வைரமுத்து அவர்கள் சொல்லிவிட்டார்கள்... "மனிதன் இப்போது பூதங்களைத் தின்னத் தொடங்கிவிட்டான். அதனால்தான் பூதங்கள் மனிதனைத் தின்னத் தொடங்கி விட்டன" – என்று சொல்கிறார் கவிஞர். "மண்ணியல், விண்ணியல் மாற்றங்களை மனிதகுலம் பொருட்படுத்தாது போயின் ஐம்பூதங்களும் மனிதனுக்கு எதிராகத் திரும்பிவிடும்" – என்கிறார். அதுதான் உண்மை.

மண்ணும் – நீரும் – காற்றும் – வானமும் மாசுபட்டு விட்டதால், அந்த இயற்கை தன் குணத்தை இழந்து வேறுபடத் தொடங்கி விட்டதன் அடையாளத்தைதான் நாம் இப்போது பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

- மழை பெய்வது இல்லை.
- பெய்தால் அதிகமாகப் பெய்கிறது.
- காற்று மாசுபட்டு விட்டது.
- உஷ்ணக்காற்று அதிகமாக வீசுகிறது.
- புவி அதிகப்படியாக வெப்பம் அடைந்து வருகிறது.
- நிலத்தடி நீர் ஆதாரம் குறைந்து விட்டது. – இவை அனைத்தும் ஐம்பூதங்களைக் காக்கத் தவறியதன் விளைவுதான்.

### கவிதை மூலமாக வைரமுத்து விடும் எச்சரிக்கை மணி!

இனியாவது விழிப்படையாவிட்டால் பேரழிவு அதிகமாகும் என்ற எச்சரிக்கை மணியைத்தான் மகா கவிதை மூலமாக வைரமுத்து அடித்துள்ளார். எனவே, இது கவிதைப் புத்தகம் அல்ல, காலப் புத்தகம் என்றே சொல்லலாம். கவியரசு கண்ணதாசன் அவர்கள், "கவிஞன் நானோர் காலக் கணிதம்" என்று சொல்வார். அதைப்போல, காலக் கணிதமாக கவிப்பேரரசு மாறி நிற்கும் புத்தகம்தான் மகா கவிதை!

## கால நிலை மாற்றத்தை எதிர் கொள்ள தமிழ்நாடு அரசு தீவிர நடவடிக்கை!

தமிழ்க் கவிதையில் காதலைப் பற்றி – இயற்கையைப் பற்றி – அரசியல் பற்றி – அழகியல் பற்றி – அதிகமாக எழுதப்பட்டிருக்கிறது. அறிவியல் கவிதைகள் குறைவு. அதிலும் அறத்தை வலியுறுத்தும் அறிவியல் கவிதைகள் மிகமிகக் குறைவு. அந்தக் குறையைப் போக்கி இருக்கிறார் கவிப்பேரரசு. இந்தப் புத்தகம் தமிழ் நிலத்தைப் பற்றி மட்டும் பேசவில்லை, உலகத்தையே பேசுகிறது. உலகத்துக்கே தேவையானதைப் பேசுகிறது.

### காலநிலை மாற்றம்தான் நமக்கு மிகப்பெரிய ஆபத்தாக மாறலாம்!

ஒரு தமிழ்க்கவி, உலகக் கவியாக மாறும் உயரம்தான் இந்த நூல். இந்நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று உங்கள் அனைவர் சார்பிலும் கேட்டுக் கொள்கிறேன். நாம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய ஆபத்தாக காலநிலை மாற்றம்தான் இருக்கப் போகிறது என்பதை நான் பல்வேறு நிகழ்ச்சிகளில் சொல்லி இருக்கிறேன். காலநிலை மாற்றத்தை உலகம் எதிர்கொள்ள, அதன் தாக்கத்தை மட்டுப்படுத்த, 2050–ஆம் ஆண்டுக்குள் கார்பன் சமநிலையை எட்டவேண்டும் என்று பல்வேறு பன்னாட்டு ஆய்வுகளும் உச்சி மாநாடுகளும் அறிவுறுத்துகின்றன.

கழக அரசு அமைந்ததும் இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் முன்னெடுக்காத பல்வேறு செயல்களை நமது திராவிட மாடல் அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் தொடக்கமாகத்தான், துறையின் பெயரை "சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை" என்று அறிவித்தோம்.

- தமிழ்நாட்டிற்கான காலநிலை திட்டத்தை அறிவித்தோம்.
- நிதிநிலை அறிக்கையில் அதற்கென 500 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறோம்.
- தமிழ்நாடு பசுமை இயக்கத்தின் மூலம் தமிழ்நாட்டின் காடுகளின் பரப்பளவை 21 விழுக்காட்டில் இருந்து 33 விழுக்காடாக அடுத்த பத்தாண்டுகளுக்குள் உயர்த்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

### சமூகத்தில் அனைவரிடமும் கொண்டு சேர்க்க ‘கால நிலை அறிவு இயக்கம்’!

- சுமார் 2 கோடியே 8 லட்சம் மரக் கன்றுகள் பதியன் போடப்பட்டு, அவற்றை நடும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் தமிழ்நாட்டின் பசுமைப் போர்வையை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், கார்பனை உள்வாங்கவும் பயன்படும்.
- காலநிலை மாற்றம் குறித்து பள்ளி – கல்லூரி மாணவர்கள், தொழில்முனைவோர் என சமூகத்தின் அனைத்து மக்களுக்கும் கொண்டுசேர்க்க "காலநிலை அறிவு இயக்கத்தை" தமிழ்நாட்டில் செயல்படுத்தப் போகிறோம்.
- இந்த அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைக்க இந்தியாவிலேயே முதல்முறையாக "Tamil Nadu Green Climate Company" உருவாக்கப்பட்டிருக்கிறது.
- மக்கள் கடைகளுக்குச் செல்லும்போது வீட்டிலிருந்தே பைகளை எடுத்துச்செல்ல வேண்டும் என்பதற்கான குறியீடாக "மீண்டும் மஞ்சப்பை" இயக்கம் துவக்கப்பட்டிருக்கிறது.
- இவை அனைத்தையும் ஒருங்கிணைக்க, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள, "காலநிலை மாற்ற நிர்வாகக் குழு" எனது தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் பல்வேறு விஷயங்களை ஒருங்கிணைத்துச் செயல்படுத்த அரசு சாராத பலரும் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

### சுற்றுச் சூழலில் தனிக் கவனம் செலுத்தும் ஒரே மாநிலம் தமிழ்நாடு!

இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் இந்தளவுக்கு சுற்றுச்சூழலில் கவனம் செலுத்தவில்லை.

சமீபத்தில் ஏற்பட்ட புயல் – மழை – வெள்ளம் ஆகியவை சூழலியல் பிரச்சினைகள் மீது அதிகமான கவனத்தை ஈர்க்கின்றன. அதைப் போலவே கவிப்பேரரசு அவர்களின் மகா கவிதையும் ஐம்பூதங்கள் மீதான அக்கறையை அதிகரிப்பதாக அமைந்துள்ளது.

இந்நூலை – கருத்து வாளை, அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கவிதைகளைப் படிப்பதோடு, அதன்படி நடக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். கவிப்பேரரசு அவர்களே! உங்கள் தமிழ்க் கவிதையை தமிழ்நாடு பேசும்! இயற்கை மானுடம் பேசும்! இந்த ‘மகா கவிதை’யை உலகம் பேசும்! என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.





# எங்கள் முதல்வரே

வருக...வருக...

அன்புடன் வரவேற்கும்

## கே.என்.நேரு

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் / கழக முதன்மைச் செயலாளர்

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர்

காடுவெட்டி **ந.தியாகராஜன்**
திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர்

**க.வைரமணி**
திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர்


கலைஞர் 100
1924 - 2023
முத்தமிழறிஞர்
பதிப்பகம்
முத்தமிழறிஞர் பதிப்பகத்தைத் தொடங்கி வைத்து,
9 நூல்கள் வெளியிடுதல்
நாள் : 02-01-2024 செவ்வாய்க்கிழமை
ARASU ARTS
வெளியிடுபவர்
கழகத் தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்கள்
உடன்பிறப்பே
திராவிடத்தால் வாழ்கிறோம் 1
திராவிடத்தால் வாழ்கிறோம் 2
'டாக்டர்' கலைஞர்
திராவிட சினிமா
திராவிட மாடல் அரசு
திராவிடப் போராளிகள்
இடம் பொருள் கலைஞர்
கலைஞரும் நானும்
முத்தமிழறிஞர் பதிப்பகம்
அன்பகம், தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

# புதிய நம்பிக்கையோடும் சூரியனைக் கொண்டாடுவோம்!

## ‘கணையாழி’ தலையங்கம்!

வெள்ளத்தில் மிதந்தது சூரியன்
ஆனாலும்
தமிழர் திருநாள்
சூரியனைக் கொண்டாடுவோம்!
தண்ணீர் வெள்ளத்தில்
தானும் நடந்து
இயல்பு வாழ்க்கைக்கு மக்களை
எடுத்து வந்திருக்கும்
முதல்வரைக் கொண்டாடுவோம்!

போராடிப் போராடி
எதிர்கொள்ளும் போதே
சாதி, மத ஏற்றத் தாழ்வு எனும்
சமூகப் பேரிடர்
புதுப்புது அவதாரங்களில்
களமிறங்குவதைப் போல

அதிசய மழை,
மேக வெடிப்பு, நில நடுக்கம்,
வானத்தில் காற்றின்
அரக்க விளையாட்டு என்று
ஒவ்வொரு முறையும் புதிது புதிதாக
வெவ்வேறு அவதாரங்களில்
இயற்கைப் பேரிடர்!

இயற்கைப் பேரிடர்!
எதிர்க்க முடியாது;
தடுக்க முடியாது;
தப்பிக்கத்தான் முடியும்!

ஆனால்
மனிதர்கள் உருவாக்கும்
சமூகப் பேரிடரைத் தொடர்ந்து
எதிர்க்க வேண்டும்; தகர்க்க வேண்டும்!

தகர்க்க முனைவது வன்முறையாம்
இயற்கையைச் சிதைப்பது வளர்ச்சியாம்!

இயற்கைப் பேரிடரோ
சமூகப் பேரிடரோ
தமிழர்களுக்குப் புதிதில்லை!
கடல்கோள், சுனாமிகளையும்
கடந்து வந்தவர்கள் தமிழர்கள்!

வெள்ளப் பேரிடரைச் சொல்லாத
தொன்மை நாகரிகம் கிடையாது.
சுமேரியாவின் சார் ரூபாக் (தெற்கு ஈராக்)
வெள்ளத்திலிருந்து தப்பிக்கக்
கப்பல் செய்யக்
கட்டளை போட்டிருக்கிறார் கடவுள்!

பாபிலோனியா கில்காமேசு வரலாறு
வெள்ளத்தால் கடவுள்
உலகை அழிக்கப் போவதாகவும்
தப்பிக்கக் கப்பல் கட்டச் சொன்னதாகவும்
பதிவு செய்திருக்கிறது.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த
கடவுள் வெள்ளத்தை ஏவி விட்டதாகவும்
கதை இருக்கிறது!

ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்ட
ஆதிமனிதத் தலைமுறைகள்
கடவுளை மறந்தனராம்.
கோபத்தில் கடவுள் உலகை அழிக்க
வெள்ளத்தை அனுப்பி வைத்தாராம்!

வான மதகுகள் உடைந்து
நாற்பது நாள் மழை கொட்டியதாம்!
பூமியின் ஊற்று மடைகளும்
திறந்துகொண்டனவாம்!
நோவா தப்பிக்கக் கடவுள் தந்த கப்பல்
அரராத் மலையில் தரை தட்டியதாம்!

ஒட்டுமொத்த உலகையும் ஒரே காலத்தில்
அழிக்க மாட்டேன் இனி என்று
கடவுள் தந்த
உறுதிமொழிக் கையொப்பம்தான்
மேகத்தில் தெரியும் வானவில்லாம்!

அடைமழையில்
மதுராந்தகம் ஏரி உடையாமல்
இராமரும் இலக்குவனும்
காவல் காத்த கதையை, நம்மூர்
ஏரி காத்த இராமர் கோயில் சொல்கிறது!
அங்கே
‘ஆராதனை என் அறியாமை ஒன்றுமே’ என்று
கம்பர் சொன்னதாகவும் கதை.

பெருவெள்ளத்திலிருந்து
பூமியையும் மக்களையும் காப்பாற்றத்
திருமால் எடுத்த மீன் அவதாரத்தைச்
சொல்கிறது மச்ச புராணம்!

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு
மூழ்கிப் போன பூமியைத்
தோண்டி எடுத்து வந்து
படகுபோல் நீரில் மிதக்க விடத்
திருமால் எடுத்தது வராக அவதாரமாம்.

அரிமர்த்தன பாண்டியன்
ஆட்சிக் காலத்தில்
நரியைப் பரியாக்கிய
சிவபெருமான் திருவிளையாடலில்
வைகை ஆற்றில் பெருவெள்ளமாம்!

மக்களைக் காப்பாற்றக்
கரையை அடைக்க
வீட்டுக்கு ஒரு ஆள் என்று
கட்டளை இட்டிருக்கிறான்.

யார் யாருக்கு எந்தெந்த இடம் என்று
நிவாரணப் பணிகள்
பிரித்துக் கொடுக்கப்பட்டனவாம்!

‘கூலி கொடுத்து என்னை
வேலைக்கு அமர்த்துபவர் உண்டோ’ என,
ஆள் துணை இல்லாமல்
பிட்டு விற்ற வந்திப் பாட்டியிடம்
கூலிக்கு ஆளாக வந்து
திருமுடியில் மண் சுமந்து
வேடிக்கை காட்டி, வேலையைக் கெடுத்த
கடவுளும்
பிரம்படி பட்ட கதையைச் சொல்கிறது
நம்ம ஊர்
திருவிளையாடல் புராணம்!

‘அன்றிரவு’ சிறுகதையில்
புதுமைப்பித்தனும்
மதுரை வெள்ளத்தில்
சிவனின் திருவிளையாடலை
வழிமொழிந்திருக்கிறார்.

இப்படிக்
கதைகளில் எல்லாம் வெள்ளத்தைக்
கட்டுப்படுத்தி மக்களைக் காப்பாற்றக்
கடவுள் அவதாரங்கள்தான் வந்திருக்கின்றன!
ஆனால் வரலாற்றில் தேடிப் பார்த்தால்
கடவுளை எதிர்பார்க்காமல்
கல்லணை கட்டியும்
காவிரிக்குக் கரை எடுத்தும்
வெள்ளத்திலிருந்து மக்களைக் காத்த
வீரனாகத் தெரிகிறான் கரிகாலன்!

இப்போது
புயல் அடித்தது!
வெள்ளம் சூழ்ந்தது
கச்சா எண்ணெய் கலந்தது!
போதாக் குறைக்கு
உரத் தொழிற்சாலையிலிருந்து
அமோனியா கசிந்தது!

பேரிடரில்
பகுதி பகுதியாகத்
தவணை முறையில்
தத்தளித்தது தமிழகம்!
ஐம்பது ஆண்டுகால
வரலாறு காணாத பேரிடரைச்
சமாளித்து உடனடியாக
இயல்பு நிலைக்குத் திருப்பியிருக்கிறார்
தமிழ்நாட்டு முதல்வர்!

எனவே
புதிய நம்பிக்கையோடும்
சூரியனைக் கொண்டாடுவோம்!



- ம.ரா.

**நன்றி : ‘கணையாழி’**
ஜனவரி - 2024

புதுக்கோட்டை மாவட்ட எல்லையில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, ஜன. 2 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் 38 வது பட்ட மளிப்பு விழாவிற்கு வருகை தரும் தமிழக முதல்வர் கழகத் தலைவர் அவர்களுக்கு, புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (02.01.2024 - செவ்வாய்க்கிழமை) காலை 9 மணியளவில் மாவட்ட எல்லையான மாத்தூரில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இந்நிகழ்வுகளில் மாநில , மாவட்ட நிர்வாகிகள் , தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் , முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய , நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், நகராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள், கழக. முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தமது அறிக்கையில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் ஆகியோர் கூறி உள்ளனர்.



கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விருதுநகர் வடக்கு மாவட்டக் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக மாநில அளவிலான மாபெரும் கபடிப் போட்டி விருதுநகரில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனித மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு முதல் பரிசு வென்ற திருப்பூர் டால்பின் மற்றும் இரண்டாம் பரிசு பெற்ற தோனுகால் அணிக்கு பரிசுகளும் பாராட்டு ச் சான்றிதழ்களும் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலை வகித்தார். மாநில துணைச் செயலாளர்கள் பொன் கௌதம சிகாமணி எம்.பி., எஸ்.ஆர்.பார்த்திபன் எம்.பி., வே.நம்பி, டி.கௌதமன், நிவேதா ஜெகா, பைந்தமிழ் பாரி, கார்த்திக், மு.வாசிம் ராஜா, சுரேஷ் மற்றும் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியன் பொதுக்குழுக் கூட்டம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. - மு.சண்முகம் எம்.பி. பங்கேற்பு! கோ.சி.வள்ளுவன் அறிக்கை!

தென்காசி, ஜன. 2-

தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியன் மாநில பொதுக்குழு கூட்டம் நாளை (03.01.2024 - புதன்கிழமை) காலை 9 மணிக்கு தென்காசி இலஞ்சி குற்றாலம் மதுரை மெயின் ரோட்டில் அமைந்துள்ள ஸ்ரீ சாரதாம்பா கிராண்ட் மகாலில் மாநிலத் துணைத் தலைவர் து.முருகன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இது தொடர்பாக மாநில பொதுச் செயலாளர் கோ.சி.வள்ளுவன் கூட்ட அழைப்பிதழில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியன் மாநில பொதுக்குழு கூட்டம் நாளை (03.01.2024 புதன்கிழமை) காலை 9 மணிக்கு தென்காசி இலஞ்சி குற்றாலம் மதுரை மெயின் ரோட்டில் அமைந்துள்ள ஸ்ரீ சாரதாம்பா கிராண்ட் மகாலில் மாநிலத் துணைத் தலைவர் து.முருகையன் தலைமையில் நடைபெறுகிறது. மாநில பொருளாளர் பி.எம்.சண்முகராஜ் வரவு செலவு அறிக்கையை சமர்ப்பிக்கிறார்.

தென்காசி மண்டல செயலாளர் சு.வெங்கடேஷ் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் புதிய நிர்வாகிகள் அறிமுகம் செய்து வைத்து பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. உரையாற்றுகிறார். கழக துணைப் பொதுச் செயலாளரும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் வாழ்த்துரை வழங்குகிறார்.

நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தொ.மு.ச. பேரவை பொருளாளர் கி.நடராஜன், பேரவை செயலாளர் ஆ.தர்மன், மாவட்ட ஊராட்சி தலைவர் தமிழ்ச்செல்வி, இலஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் சின்னத்தாய் சண்முகநாதன், துணைத் தலைவர் மு.முத்தையா உள்பட மத்திய சங்க ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், இணைப் பொது செயலாளர்கள், மாநில துணைத் தலைவர்கள், மாநில துணைப் பொதுச் செயலாளர்கள், மாநில அமைப்பு செயலாளர்கள், அலுவலக செயலாளர்கள் உட்பட மண்டல தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் நெல்லை மண்டல தலைவர் கு.மணிகண்டன் நன்றி உரையாற்றுகிறார்.

திருமதி ரத்னா லோகேஷ்வரன் எம்.சி. தலைமையில் - விருகம்பாக்கம்

# 128வது வார்டில் - 5000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

## ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. வழங்கினார்! மு.இராசா எம்.சி. முன்னிலை!

சென்னை, ஜன. 2 -

விருகம்பாக்கம், 128வது வார்டில் 5000 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்கள் மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன் தலைமையிலும், ஏற்பாட்டிலும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு பகுதிச் செயலாளரும், 129வது வார்டு மாமன்ற உறுப்பினருமான மு.ராசா, வட்டச் செயலாளர்கள் கோவிந்தராஜ், ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

5000 பேருக்கு நிவாரணப் பொருட்களை சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா வழங்கினார்.

மிக்ஜாம் புயலால் விருகம்பாக்கம் 128வது வார்டில் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளான இந்திரா நகர், காந்தி நகர், சாதிக் பாட்சா நகர், ஷேக் அப்துல்லா, சிந்து தெரு, அம்பேத்கர் தெரு, யமுனா தெரு, கோதாவரி தெரு, கண்ணதாசன் நகர், தேவி கருமாரி அம்மன் கோவில் தெரு, செல்லி அம்மன் கோவில் தெரு, உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் 5000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

இ.கண்ணப்பன் தலைமை! கா.தாமரைச்செல்வன் முன்னிலை! மாதவரம் 16 வது வட்டம்

# மணலி புது நகரில் மாற்றுத்திறனாளிகளுக்கு நிவாரணப் பொருட்கள்!

## புழல் எம்.நாராயணன் வழங்கினார்!

சென்னை, ஜன. 2

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், மாதவரம் 16 வது வட்டம், மணலி புதுநகர் மற்றும் சுற்றுவட்டாரத்தில் வசிக்கக்கூடிய மாற்றுத்திறனாளிகளுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.

மாதவரம் 16 வது வட்டத்தில் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாகவும் பூண்டி ஏரியிலிருந்து திறந்து விடப்பட்ட மழை நீரின் காரணமாகவும் மணலி புது நகர் சுற்றுவட்டாரத்தில் உள்ள பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இதன் காரணமாக அரசு சார்பிலும் மாநகராட்சி சார்பிலும் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டு உள்ளது. இந்த நிலையில் மணலி புதுநகர் சுற்றுவட்டாரத்தில் வசிக்கும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு நிவாரண பொருட்கள் வழங்க வேண்டும் என்று, மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்பு நல சங்கத்தின் தலைவர் பிரேமா மற்றும் நிர்வாகிகள் பாக்கியலட்சுமி, ஆனந்தி, கஜலட்சுமி, மணிமேகலை, செல்வி, அரிகிருஷ்ணன் ஆகியோர், மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் மற்றும் 16 வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் ஆகியோரிடம் வைத்த வேண்டுகோளை ஏற்று, (1.1. 2024) மாலை 3 மணி அளவில் மணலி புதுநகர் பகுதியில் உள்ள திருவள்ளுவர் சிலை அருகே, மேற்படி மாற்றுத்திறனாளிகளுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.

16 வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி, போர்வை உள்ளிட்ட நிவாரண பொருட்களை மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் வழங்கினார்.

நிவாரணப் பொருட்களை பெற்றுக் கொண்ட மாற்றுத்திறனாளிகள் தமிழ்நாடு முதல் அமைச்சருக்கும், கழக நிர்வாகிகளுக்கும் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

சமூக இடைவெளியுடன் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் 19 வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன், 16 வது வட்ட நிர்வாகிகள் சி.முத்தையா, கே.ஏ.ரமேஷ், புவனேஸ்வரி மகேஷ்குமார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் கருணாகரன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.உதயகுமார், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.சண்முகப்ரியன், எஸ்.சிவக்குமார், விவசாய அணி துணை அமைப்பாளர்கள் டி.வினோத் கே.ராஜ்குமார், எலந்தனூர் வி.சிவபிரகாஷ், மணலி புது நகர் வக்கீல் பி.கே.கண்ணன், சி.எம்.ராஜா, டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், செமின் எடிசன், கடப்பாக்கம் சாம்ராஜ், வக்கீல் சுரேந்தர், சிவராமன், சிவராஜன், தீயம்பாக்கம் பாலாஜி, ஜான்சன், வில்சன், வடபெரும்பாக்கம் மைக்கேல், செந்தில் கார்த்திக், தினேஷ், சதீஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 16 வது வட்டம், மணலி புதுநகர் பகுதியில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு நிவாரணப் பொருட்களை 16 வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் தலைமையில் 19 வது வட்டச் செயலாளர் கா.தாமரைச்செல்வன் முன்னிலையில் மாதவரம் வடக்குப் பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாடு செய்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்பு நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டார்கள்.



சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி சேத்துப்பட்டு 108(அ)வட்டத்தில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி. சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர். தயாநிதிமாறன் எம்.பி., எழும்பூர் தெற்கு பகுதி கழக செயலாளர் வி.சுதாகர், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு, கே.எஸ்.ரவிச்சந்திரன், கே.எஸ்.எம்.நாதன் மாமன்ற உறுப்பினர். 108(அ)வட்ட கழக செயலாளர் எல்.சுந்தரராஜன், ஏ.நிர்மலா தேவி, எஸ். ரசூல், எஸ்.ஜெகதீசன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### சிறப்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கையால்

# சென்னையில் ‘உயிரிழப்பு இல்லா புத்தாண்டு’!

## ஒத்துழைப்பு வழங்கிய பொதுமக்களுக்கு - காவல்துறை ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் பாராட்டு!

சென்னை, ஜன. 2 -

இந்த ஆண்டு புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது எந்த வித அசம்பாவிதங்களும் நடைபெறாமல் தடுக்க சென்னை மாநகரம் முழுவதும் போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் தலைமையில் கூடுதல் கமிஷனர்கள் பிரேம் ஆனந்த் சின்கா, அஸ்ரா கார்க், போக்குவரத்து கூடுதல் கமிஷனர் சுதாகர் ஆகியோர் மேற்பார்வையில் இணை கமிஷனர்கள், 16 துணை கமிஷனர்கள் என 18 ஆயிரம் போலீசார் நேற்று மாலை முதல் நேற்று 1 ஆம் தேதி அதிகாலை வரை பணியில் ஈடுபட்டனர்.

சென்னையில் 100க்கும் மேற்பட்ட கோயில்கள் மற்றும் தேவாலயங்களில் பொதுமக்கள் சிரமங்கள் இன்றி சிறப்பு வழிபாட்டிற்கு வந்து செல்லும் வகையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. மேலும், குடித்துவிட்டு வாகனம் ஓட்டும் நபர்கள், பைக் ரேசில் ஈடுபடும் நபர்கள் மற்றும் போக்குவரத்து விதிகளை மீறும் நபர்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்க மாநகரம் முழுவதும் 420 இடங்களில் வாகன சோதனை நடத்தப்பட்டது.

அதேபோல் இந்த ஆண்டு பைக் ரேஸ் மற்றும் வாகன சாகசங்களில் ஈடுபடுவதை கண்காணிக்க 25 சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தது. இந்த குழுக்கள் எடுத்த சிறப்பான நடவடிக்கையால் பைக் ரேஸ் முற்றிலும் தடுக்கப்பட்டது. பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களான மெரினா, பெசன்ட் நகர் கடற்கரையில் ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கையை போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் நேரில் ஆய்வு செய்தார். அதேபோல் மாநகரம் முழுவதும் 420 வாகன சோதனை இடங்களையும் கமிஷனர் ஆய்வு செய்து பணிகளை விரைவு படுத்தினார்.

**விபத்துகள் இல்லா புத்தாண்டு!**

இதனால் எந்த ஆண்டும் இல்லாத வகையில் இந்து ஆண்டு, ஒரு விபத்துக்களும் மற்றும் உயிரிழப்பு இல்லாத புத்தாண்டாக அமைந்துள்ளது.

புத்தாண்டு கொண்டாட்டம் நடந்த பகுதிகளில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ‘டிரோன்’கேமரா மூலமும், துணை கமிஷனர் தலைமையில் அமைக்கப்பட்ட பெண் காவலர்கள் கொண்ட குழுவினரும் சிறப்பாக செயல்பட்டதால், பெண்களுக்கு எந்த தொந்தரவுகளும் இன்றி இனிமையான புத்தாண்டாக இந்த 2024ம் ஆண்டு பிறந்துள்ளது.

எனவே ‘உயிரிழப்பு இல்லா புத்தாண்டு’ என்ற முழக்கத்தை சரியாக முறையில் திட்டமிட்டு நடத்திய காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் என பாதுகாப்பு பணியில் இருந்து 18 ஆயிரம் போலீசார் 1500 ஊர்காவலர் படையினருக்கு போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

**போலீசாருக்கு ஒத்துழைப்பு!**

மேலும், குடிபோதையில் வாகனம் ஓட்டுவது, இரவு நேரங்களில் தேவையில்லாத வகையில் வெளியே சுற்றுவது ஆகிய நிகழ்வுகளை பொதுமக்கள் பல குறைத்து கொண்டதற்கும், காவல்துறையினருக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்ததற்கும் போலீஸ் கமிஷனர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

2023ம் ஆண்டு புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது, குடிபோதையில் வாகனம் ஓட்டியதாக மாநகர காவல்துறை 252 பேர் மீது வழக்கு பதிவு செய்தது. அதேபோல், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தி அதிவேகமாக வாகனம் ஓட்டியதாக 24 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும், ஆபத்தான முறையில் பைக் ரேசில் ஈடுபட்ட 22 பேரை போலீசார் கைது செய்து மொத்தம் 276 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### கனமழையால் பாதிக்கப்பட்ட

# தூத்துக்குடியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆய்வு!

## பொதுமக்களை நேரில் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தார்!

தூத்துக்குடி, ஜன. 2 -

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டம் கேம்பலாபாத், சேத்துக்கான் வாய்கான், மாரமங்களம் ஆகிய ஊராட்சியில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களைஅமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்து ஆறுதல் தெரிவித்தார்.

தென் மாவட்டங்களான தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, ஆகிய மாவட்டங்களில் கடந்த 17ஆம் தேதி பெய்த கனமழையால்பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழக அரசு சார்பில் ஆறாயிரம் ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.மேலும் மழை பாதிப்புகளை பார்வையிடுவதற்காக தூத்துக்குடி மாவட்டத்திற்குபகுதிவாரியாகஅமைச்சர்கள் நியமித்து அவர் உத்தரவிட்டார். இந்நிலையில்தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டத்திற்குட்பட்ட கேம்பலாபாத், சேத்துக்கான் வாய் கான்,பள்ளிவாசல் உள்ளிட்ட பகுதிகளிலும், மாரமங்களம் ஊராட்சிகளில் அதிக கனமழையால் பாதிக்கப்பட்டமக்களைசிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சந்தித்து அவர்களிடம் குறைகளை கேட்டு அறிந்து ஆறுதல் தெரிவித்தார்.

தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலமைச்சர் சார்பில்ஆறுதல் தெரிவித்ததுடன் அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டஅமைச்சர் செஞ்சி மஸ்தான் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் நிலவரம் குறித்து முதலமைச்சரின் கவனத்திற்கு உடனடியாக கொண்டு செல்லப்படும் என அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் திருவைகுண்டம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கோட்டாளம்,விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ஆனந்தன், ஒன்றிய அவைத் தலைவர் மாரியப்பன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பிரபாகரன், கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் மாரியப்பன், கிளை செயலாளர் ஜான்சன் உள்ளிட்ட உடன் இருந்தனர்.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதியில் மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் 102 மற்றும் 102 (அ) வட்டங்களில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் ஏற்பாட்டில் 5000 குடும்பங்களுக்கு வழங்கினார். உடன் அண்ணாநகர் வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், 102 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராணி ரவிச்சந்திரன், 102 வது வட்டக் கழகச் செயலாளர் பி.சந்திரசேகர், 102 (அ) வட்டக் கழகச் செயலாளர் எம்.ஜி.ரவிக்குமார் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### மார்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு!

# மணிப்பூரில் கலவரம் – 3 பேர் பலி!

இம்பால், ஜன.2-

மணிப்பூர் மாநிலத்தின் தௌபால் மாவட்டத்தின் லிலாங் சிங்காவ் பகுதிக்குள் காரில் வந்திறங்கிய மர்ம நபர்கள் பொது மக்களை நோக்கி நடத்திய திடீர் துப்பாக்கி சூடு அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இன்று மாலை நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் பொது மக்களில் மூன்று பேர் உயிரிழந்தனர். மேலும் ஐந்து பேர் படுகாயம் அடைந்தனர்.

திடீர் துப்பாக்கி சூட்டை தொடர்ந்து அந்த மாவட்டத்தில் ஊடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தௌபால் மட்டுமின்றி இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு, காக்சிங் மற்றும் பிஷ்னுபூர் மாவட்டங்களிலும் ஊரடங்கு உத்தரவு மீண்டும் பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

திடீர் துப்பாக்கி சூட்டை தொடர்ந்து ஆவேசம் அடைந்த உள்ளூர்வாசிகள் மூன்று நான்குசக்கர வாகனங்களுக்கு தீ வைத்தனர். அந்த வாகனங்கள் யாருக்கு சொந்தமானவை என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

நேற்று நடைபெற்ற வன்முறை சம்பவத்திற்கு அம்மாநில முதலமைச்சர் பைரன் சிங் கடும் கண்டனம் தெரிவித்தார். மேலும் தாக்குதல் நடத்தியவர்களை பிடிக்கும் பணிகளில் காவல் துறை செயல்பட்டு வருகிறது.

விரைவில் அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, சட்டப்படி தண்டிக்கப்படுவர் என அவர் மேலும் தெரிவித்தார்.

### இந்திய அரசின் அடிப்படைக் கட்டமைப்பே ஒன்றிய பா.ஜ.க. அரசால் தகர்க்கப்பட்டுவிட்டது!

# ‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்ய வேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி - புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் வலியுறுத்தல்!

சென்னை, ஜன. 2 -

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்பையே தகர்க்கும் ஒன்றிய பி.ஜே.பி. அரசை வீழ்த்திட, ‘இந்தியா’ கூட்டணியின் ஒருங்கிணைப்புப் பிரச்சாரமும், ஒற்றுமையும் தேவை, தேவை என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

பல சோதனைகளை இயற்கை உற்பாதங்களை ஆண்டு இறுதியில் அதிகம் தந்த ஆண்டாக அமைந்து, ஜனநாயகத்தின் எதிர்காலத்தைக் கேள்விக் குறி யாக்குதே ஒன்றிய பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். ஆட்சி! இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைத் தத்துவங்களையும், விழுமியங்களையும் விடை கொடுத்தனுப்பியது பி.ஜே.பி. ஆட்சி! இந்த விந்தை ஆட்சியின் வினையாடல்களுக்கும், அனைத்து முற்போக்கு உலகத்தவரின் முகம் சுளிப்பு க்கும், முழு விமர்சனங்களுக்கும் இடம் தந்த 2023 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது.

2024 ஆம் ஆண்டான புத்தாண்டு இன்று (1.1.2024) தொடங்கியது. இவ்வாண்டின் இன்னும் மூன்று, நான்கு மாதங்களில் ஒன்றிய அரசுக்கான பொதுத் தேர்தல் வரவிருக்கும் நிலையில், இவ்வாண்டு மிக முக்கியமான, மக்களின் விழிப்புணர்வின் தேவையை வலியுறுத்தும் ஆண்டாக உள்ளது!

நமது அரசமைப்புச் சட்டத்தின் கர்த்தாக்கள் குறிப்பாக டாக்டர் அம்பேத்கர் உருவாக்கிய சட்டத்தின் முகப்புரையில் உள்ள 1.இறையாண்மை 2.சமதர்மம் 3.மதச்சார்பின்மை, ஜனநாயகம் 4.குடியரசு என்பனவற்றின் முக்கியத்துவம் (Core Values) கடந்த நான்கு ஆண்டுகளில் வெகுவாகக் காணாமற் போய்க் கொண்டுள்ளது!

அரசின் அமைப்புகளில் வெளிப்படைத்தன்மைக்குப் பதில், ‘தோலிருக்க, சுளை முழுங்கும்‘ வகையில், மக்கள் பிரதிநிதிகளின் குரல் எதிர்க்கட்சியினர் குரல் கேட்கப்பட முடியாததாக்கப்பட்டு, வரலாறு காணாத வகையில் 146 உறுப்பினர்கள் தொடர் முழுவதும் (சிலர் அடுத்தத் தொடர் வரையிலும்) ‘சஸ்பெண்ட்’ செய்யப்பட்ட நிலையில், 5 சட்டங்கள் மிக முக்கிய குற்றவியல் சட்டங்கள் உள்பட, சம்பந்தமான மசோதாக்கள் வெறும் ஆளுங்கட்சியினர் மட்டுமே ஓட்டளித்து நிறைவேற்றப்பட்டுள்ள விசித்திரம் நடந்துள்ளது!

**பறிபோகும் மாநில உரிமைகள்!**

உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனப் பிரச்சினையிலும் சரி, தேர்தல் ஆணையத்தின் உறுப்பினர்கள் போன்ற (ஜனநாயகக் காப்புப் பிரச்சினை) உறுப்பினர்கள் நியமன முறையிலும், அதன் ஆணைகளுக்கு நேர் எதிர்நிலைப்பாட்டை பா.ஜ.க. ஆட்சி எடுத்து, தானடித்த மூப்பாகவே நடந்துகொண்டுள்ளது!

**மாநில உரிமைகள் அன்றாடம் பறிபோகும் பரிதாபம்!**

எதிர்க்கட்சிகள்மீது மட்டும் பாயும் அமலாக்கத் துறை, வருமான வரித் துறை, சி.பி.அய். போன்றவை!

ஊடகங்கள், ஜனநாயகத்தின் நான்காவது தூண், கலகலத்துப் போகும் அளவுக்கு, அச்சுறுத்தப்பட்டு, அவர்களின் எண்ணப்படி நடக்கும் நிலை!

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களை அரசியல் ஏவுகணைகளாக்கி, அவ்வாட்சிகளை முறைப்படி நடத்த விடாமல் முடக்கும் விந்தை!

**எல்லாம் ‘ஜீம்லா’தானா?**

தேசியப் பேரிடர்



போன்ற நிலையில், நிவாரணத்தை அள்ளி வழங்க வேண்டிய நேரத்தில், கிள்ளியும் தருவதற்கு மனு போட்டுக் காத்திருக்கும் மாநில அவலங்கள், இப்படி எத்தனை எத்தனையோ!

கொடுத்த வாக்குறுதிகள், விலைவாசி, வேலை வாய்ப்புத் தரும் திட்டங்கள், மக்கள் நல உதவிகள் எல்லாம் ‘ஜூம்லா’’ சும்மாப் பேச்சு இப்படி ஓர் ஆட்சி, ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஆட்சி, மீண்டும் 2024 தேர்தலில் வெற்றி பெற்றால், அத்துடன் ஜனநாயகம் காணாமற்போய்விடும் என்பது கல்லின்மேல் எழுத்து!

**இராமர் கோவில் திறப்பின் பின்னணி ?**

இப்போதோ ஹிந்து ராஷ்டிரக் கொடியை ஏற்றுகிறோம் என்று உலகிற்குக் காட்டிடவும், வாக்குகளைத் திரட்டிடவும், அதிருப்தியில் இருக்கும் மக்களை மயக்கவே இராமர் கோவில்.

எனவே, தமிழ்நாடு போல், ‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்ய பொறுப்புடனும், கவலையுடனும் கூடிய ஓர் ஆக்கப்பூர்வ செயல்முறைத் திட்டமாக விட்டுக் கொடுத்து, வெற்றி வாய்ப்புகளையே ஒரே இலக்காகக் கொண்டு வேட்பாளர்களை, பா.ஜ.க.வுக்கு எதிராக நிறுத்தும் திட்டத்தை ‘இந்தியா’ கூட்டணி உருவாக்குதல் அவசரம், அவசியம்!

2024 இல் முக்கிய முன்னுரிமைப் பணி இது!

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, ஒப்பற்ற முதலமைச்சர் மாண்புமிகு மானமிகு மு.க.ஸ்டாலின் அவர்களது சீரிய தலைமையில் நடைபெறும் ‘திராவிட மாடல்’ ஆட்சியை, ‘வாளும் கேடயமாக’ நின்று, திட்டமிட்ட திரிபுவாதப் பிரச்சாரத்தின் பொய்த் திரையைக் கிழித்தெறிந்து, உண்மைகளை உலகறியச் செய்யும் உன்னத பணியை அனைத்து முற்போக்காளர்களும், கட்சிக் கண்ணோட்டமின்றி ஒன்றுபட்டு செய்ய முன்வரவேண்டும்.

**புத்தாண்டு வாழ்த்துச் செய்தி!**

திராவிடர் கழகம் ஒரு பிரச்சார இயக்கம் ஆனபடியால், திண்ணைப் பிரச்சாரம், தெருமுனைக் கூட்டங்கள், அரங்குக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள், தனித்த உரையாடல்கள் காணொலி கூட்டங்கள் ஆகிய எல்லா களங்களிலும் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனைகளை சமூக வலைத்தளங்கள் மூலமாகவும், பல உத்திகளோடும் செய்து வருவதையே வரும் மாதங்களில் முன்னுரிமைப் பணிகளாக காவிக் கிருமிகள் இந்த தேசத்தின், ஜனநாயகத்தினைப் பற்றி அழிக்காத வண்ணம் தீவிரமாக நாளும், மணியும், நிமிடமும் ஓய்வின்றி பணியாற்றிட சூளுரை மேற்கொள்ள வேண்டும்!

“குடிசெய்வார்க்கில்லை பருவம்‘’ என்ற குறளுக்கேற்ப, நமது தொண்டு பருவம் பாராது, மானம் பாராது, அதே இலக்குடன் உழைத்து, வெற்றிக்கனியைப் பறிக்க நாம் துவளாது துணை நிற்போம்! வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

அனைவருக்கும் இதுவே புத்தாண்டு வாழ்த்துச் செய்தியாகும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலை!

# எழும்பூர் தெற்கில் கலைஞர் நூற்றாண்டு விழா - புகழரங்கம்!

## நீதியரசர் கே.சந்துரு - உ.வாசுகி - கம்பம் செல்வேந்திரன் - ஓ.ஏ. நாகலிங்கம் சிறப்புரை!

சென்னை, ஜன. 2 -

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்குப் பகுதிக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, “முத்தமிழ் அறிஞர் நாவன்மை நாயகர்” என்ற தலைப்பில் நாளை (3.1.2024 ) மாலை 6 மணிக்கு சேத்துப்பட்டில் கிளப் சாலையில் உள்ள மலையாளி கிளப்பில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வி.சுதாகர் தலைமை வகிக்கிறார்.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு , தயாநிதிமாறன் எம்.பி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் நீதியரசர் கே.சந்துரு, திருமதி உ.வாசுகி, கம்பம் செல்வேந்திரன், ஓ.ஏ.நாகலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் சொ.வேலு, கோ.ஏகப்பன், கூ.பி. ஜெயின், கே.எஸ்.எம். நாதன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், அ.நிர்மலா தேவி, எஸ். ரசூல், டி.வி.வேலு, எம். மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், வான்மதி கதிரவன், வி.விஜயகுமார், ஆர்.பாபு, எஸ். டால்பின் அரி, இ.மெய்தீன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எல்.சுந்தரராஜன் நன்றி கூறுகிறார்.

### கோயம்பேட்டிலிருந்து முன்பதிவு செய்த பயணிகளுக்கு

# கட்டண வித்தியாசம் நடத்துநர் மூலம் தரப்படும்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிவிப்பு!

சென்னை: ஜன. 2 -

பயணிகளுக்கு கட்டண வித்தியாசம் நடத்துனர் மூலம் தரப்படும் என அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார். தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசு விரைவு போக்குவரத்து கழக பேருந்துகளில் 30 நாட்களுக்கு முன்னரே முன் பதிவு செய்த பயணிகளிடம் சென்னை கோயம்பேட்டில் இருந்து தென் மாவட்டங்களுக்கும் அதே போன்று தென் மாவட்டங்களில் இருந்து சென்னை கோயம்பேட்டிற்கும் பயணம் செய்வதற்காக பெறப்பட்ட கட்டணத்தில் தற்போது கிளாம்பாக்கம் வரை மட்டுமே அரசு விரைவு போக்குவரத்து கழக பேருந்துகள் இயக்கப்படுவதால் கட்டண வித்தியாசத்தொகை நடத்துனர் மூலம் பயணம் தொடங்கும் போது திருப்பி அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே அவர்களுக்கு வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்று பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களில் அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் ஏற்படும் கால தாமதத்தை தவிர்ப்பதற்காகவும், அதில் உள்ள சில நடைமுறை சிக்கல்களை தவிர்ப்பதற்காகவும் இவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



பூவிருந்தவல்லி ஒன்றியம் நெமிலிச்சேரி ஊராட்சி நாகாத்தா அம்மன் நகரில் அண்மையில் ஏற்பட்ட மிக்ஜாம் புயல் மழை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட500 நபர்களுக்கு முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் நிவாரண பொருட்களை வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் டி.தேசிங்கு, மாநகர பகுதி செயலாளர்கள் சண்.பிரகாஷ், பொன். விஜயன், ஒன்றிய குழு துணைத் தலைவர் பரமேஸ்வரி கந்தன்,பொது குழு உறுப்பினர்ஜி.விமல்வர்ஷன்,ஊராட்சி மன்ற தலைவர் கு.தமிழ்செல்வி, ஒன்றிய கவுன்சிலர் சுரேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார்,மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வழக்கறிஞர் பெ.வினோத், வி.தியாகராஜன், டி. மணிவண்ணன், கு.சேகர், ஒன்றிய நிர்வாகிகள் எம்.குணசேகரன், ஜி.சுகுமாரன், ப.கந்தன், வாசுகி எட்வின், பி.எல்.ஆர்.யோகா, மீனாட்சிஎப்சி,மோகன், வார்டு உறுப்பினர்உதயகுமாரி, குணா.பிரவீன், எம்.உதயா, ஆர். கார்த்திகேயன், உள்பட பலர் உள்ளனர்



02.01.2024
திருச்சிராப்பள்ளி
மாவட்டத்திற்கு
பல்வேறு நிகழ்ச்சிகளில்
கலந்து கொள்ள
வருகை தரும்
மாண்புமிகு.
தமிழ்நாடு
முதல்வர்
அவர்களே
வருக! வருக!
மாண்புமிகு.
கே.என்.நேரு
கழக முதன்மை செயலாளர்
நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
காடுவெட்டி
ந.தியாகராஜன் MA., MLA.,
திருச்சி வடக்கு மாவட்ட செயலாளர்,
முசிறி சட்டமன்ற தொகுதி
மண்ணச்சநல்லூர் சீ.கதிரவன் BE., MLA.,
மண்ணச்சநல்லூர் சட்டமன்ற தொகுதி
திருச்சி வடக்கு மாவட்ட தி.மு.க


கலைஞர்
100
1924 - 2023
SRI ARTS
ATTUR - 98945 01234
பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு
2.1.2024 திருச்சி மாவட்டம் வருகை தரும்
கழகத்தலைவர்–மாண்புமிகு
முதலமைச்சர்
அவர்களே வருக... வருக...வருக...
கழக முதன்மைச் செயலாளர்,
மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. கே.என்.நேரு அவர்கள்
அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA.,
மாவட்டக் கழகச் செயலாளர்–பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அரையாண்டு விடுமுறை முடிந்து இன்று (02.01.2024) பள்ளிகள் திறக்கப்படும் நிலையில் வேளச்சேரியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் நேற்று விரிவான ஆய்வு மேற்கொண்டு பள்ளியில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினார் .



தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டம் கேம்பலாபாத், சேத்துக்கான் வாய் கான், மாரமங்களம் ஆகிய ஊராட்சிகளில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சந்தித்துகுறைகளைக் கேட்டறிந்து ஆறுதல் தெரிவித்தார்.

### தமிழ்நாட்டில் புத்தாண்டுக் கொண்டாட்டம்!

# சுற்றுலாத் தலங்களில் மக்கள் வெள்ளம்!

சென்னை, ஜன.2-

ஆங்கிலப் புத்தாண்டையொட்டி தமிழ்நாட்டில் பல்வேறு சுற்றுலாத் தலங்களில் மக்கள் கூட்டம் அலைமோதியது. அவ்வூர்களில் நடந்த கொண்டாட்ட விவரங்கள் வருமாறு :-

**சென்னை:** ஆங்கில புத்தாண்டுபிறப்பையொட்டி சென்னை கடற்கரை, மாமல்லபுரம் உள்பட தமிழக முழுவதும் உள்ள சுற்றுலா தலங்களில் இன்று மக்கள் கூட்டம் அலைமோதியது.

**குமரி:** சர்வதேச சுற்றுலாத்தலமான கன்னியாகுமரியில் நேற்று காலையிலேயே ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்திருந்தனர். 2023ம் ஆண்டின் கடைசி சூரிய உதயம் மற்றும் மாலையில் கடைசி சூரிய அஸ்தமன காட்சிகளை கண்டு ரசித்தனர். இதையடுத்து இரவு நேரம் செல்ல செல்ல பல இடங்களில் இருந்து சுற்றுலா பயணிகள் அதிகளவில் குடும்பம் குடும்பமாக வர தொடங்கினர். குறிப்பாக இளசுகளின் கூட்டம் அலைமோதியது. அவர்கள் புத்தாண்டு பிறப்பதற்காக காத்திருந்தனர். நள்ளிரவு 11.45 மணிக்கே வினாடிகளை எண்ண ஆரம்பித்தனர். சரியாக நள்ளிரவு 12 மணிக்கு புத்தாண்டு பிறந்ததும், ஆட்டம்-பாட்டம்-கொண்டாட்டம் என இளைஞர்கள் உற்சாகத்தில் திளைத்தனர். ஆர்வமிகுதியில் சில இளைஞர்கள் கத்தி கூச்சலிட்டனர். ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி புத்தாண்டு வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர். கும்பலாக வந்த நண்பர்கள் ரெடியாக கொண்டு வந்திருந்த கேக் வகைகளை அங்கேயே வெட்டி பலருக்கும் கொடுத்தனர். இன்று புத்தாண்டின் முதல் சூரிய உதயம் என்பதால் அதிகாலையிலேயே சுற்றுலா பயணிகள் குவிந்தனர். குமரி குற்றாலம் என்று அழைக்கப்படும் திற்பரப்பு அருவியிலும் இன்று சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதியது.

**ஊட்டி:** கிறிஸ்துமஸ், பள்ளி அரையாண்டு விடுமுறை மற்றும் புத்தாண்டு விடுமுறை என தொடர் விடுமுறை வந்த நிலையில் ஊட்டியில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. புத்தாண்டையொட்டி சுற்றுலா பயணிகளால் ஊட்டியில் உள்ள காட்டேஜ்கள், லாட்ஜ் மற்றும் ரிசார்ட்டுக்கள் அனைத்தும் நிரம்பி வழிகின்றன. நேற்று ஊட்டியில் உள்ள தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, படகு இல்லம், சூட்டிங் மட்டம், பைக்காரா படகு இல்லம் போன்ற பகுதிகளில் ஏராளமான சுற்றுலா பயணிகள் கூட்டம் காணப்பட்டது. இரவு பல்வேறு ஓட்டல்கள், ரிசார்ட்டுக்கள் மற்றும் காட்டேஜ்களில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் களை கட்டின. சுற்றுலா பயணிகள் கேக் வெட்டியும், ஆடி, பாடி புத்தாண்டை வரவேற்று கொண்டாடி மகிழ்ந்தனர்.

**கோவை:** கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த ஆழியார் அணை மற்றும் கவியருவிக்கு திருப்பூர், ஈரோடு, சேலம், திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் கார், வேன், பஸ் ஆகிய வாகனங்களில் வந்திருந்தனர். அணையின் ஒருபகுதியில் சுற்றுலா பயணிகள் படகு சவாரி செய்தனர். ஆழியார் அணை மற்றும் பூங்காவின் அழகை ரசித்த சுற்றுலா பயணிகளில் பெரும்பாலானவர்களும், வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கவியருவிக்கும் சென்றனர். அருவியில் மிதமாக கொட்டிய தண்ணீரில், பயணிகள் வெகுநேரம் குளித்து மகிழ்ந்தனர்.

**கொடைக்கானல்:** திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் மலைகளின் இளவரசி என அழைக்கப்படுகிறது. இங்கு புத்தாண்டை கொண்டாட பிற மாவட்டங்களில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் நேற்று குவிந்தனர். இதற்காக நகரில் உள்ள தனியார் தங்கும் விடுதிகள், சுற்றுலாப் பயணிகளை கவருவதற்கு என பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர். சுற்றுலாப் பயணிகளின் வாகனங்களால், அனைத்து பகுதிகளிலும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சுற்றுலா இடங்களான மோயர் பாய்ண்ட், பைன் மரக்காடுகள், குணா குகை, தூண்பாறை, பசுமைப் பள்ளத்தாக்கு, அப்பர் லேக் வியூ, ரோஜாப் பூங்கா, பிரையண்ட் பார்க், செட்டியார் பூங்கா, கொடைக்கானல் ஏரி, கோக்கர்ஸ் வாக் உள்ளிட்ட பகுதிகளில் சுற்றுலாப் பயணிகள் நிரம்பி வழிந்தனர்.

இதனால், நகரில் உள்ள தங்கும் விடுதிகள் அனைத்தும் ஹவுஸ் புல் ஆகின. உணவு விடுதிகளும் சுற்றுலா பயணிகளால் நிரம்பி வழிந்தன. சுற்றுலா வாகனங்களால் நகரில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால், கொடைக்கானல் ஏரிச் சாலையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டது. நகரில் கடந்த பல தினங்களாக 10 டிகிரிக்கு குறைவான வெப்பம் நிலவி வருகிறது. இரவில் குளிரின் தாக்கம் அதிகமாக இருந்தது. கடுங்குளிரையும் பொருட்படுத்தால், சுற்றுலா பயணிகள் மிகவும் ரசித்து சென்றனர். இதே போல் சென்னை கடற்கரை, மாமல்லபுரம், சேலம் ஏற்காடு உள்பட தமிழக சுற்றுலா தலங்களில் நேற்று மக்கள் கூட்டம் அலைமோதியது.

### பொங்கல் பண்டிகையை முன்னிட்டு

# தென் மாவட்ட ரயில்கள் முன்பதிவு முடிந்தது!

## சிறப்பு ரயில்களை இயக்க பொதுமக்கள் கோரிக்கை!

சென்னை, ஜன.2-

பொங்கல் பண்டிகையையொட்டி சென்னையில் இருந்து தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி, தென்காசி உள்ளிட்ட பகுதிகளுக்கு இயக்கப்படும் அனைத்து ரயில்களும் முன்பதிவு முடிந்துவிட்டது. காத்திருப்போர் பட்டியல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் சொந்த ஊர் செல்வோர்பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அதிக அளவில் சிறப்பு ரயில்களை இயக்க கோரிக்கை வலுத்துள்ளது. தமிழர்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான தை பொங்கல் வருகிற ஜனவரி 15ம் தேதி (திங்கட்கிழமை) கொண்டாடப்படுகிறது.

இதற்காக சொந்த ஊர் செல்ல நினைக்கும் அனைவரும் முன்பதிவு தொடங்கிய 4 மாதங்களுக்கு முன்பே ரயில்களில் டிக்கெட் புக்கிங் செய்ய தொடங்கினர்.

இதனால், முன்பதிவு தொடங்கிய அடுத்த சில நிமிடங்களிலே அனைத்து ரயில்களிலும் டிக்கெட் ஹவுஸ் புல் ஆனது. அதாவது, 15ம் தேதி தான் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. அதற்கு முன் 12ம் தேதி(வெள்ளிக்கிழமை) முதலே மக்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல திட்டமிட்டுள்ளனர். இதனால், இந்த தேதியில் தென்மாவட்டங்களுக்கு செல்லும் அனைத்து ரயில்களும் நிரம்பியுள்ளது.

அதாவது 2ம் வகுப்பு படுக்கை வசதி பெட்டி முதல் அனைத்து ஏசி வகை பெட்டிகளும் நிரம்பியுள்ளன. குறிப்பாக சென்னையில் இருந்து தூத்துக்குடிக்கு இயக்கப்படும் முத்துநகர் எக்ஸ்பிரஸ், திருநெல்வேலிக்கு இயக்கப்படும் ரயில்கள் மற்றும் தென்காசி, கன்னியாகுமரிக்கு இயக்கப்படும் அனைத்து ரயில்களும் நிரம்பியுள்ளது. ஒவ்வொரு ரயில்களிலும் காத்திருப்போர் எண்ணிக்கை 200 எண்ணிக்கையை கடந்துள்ளது. இதே போல கோவை, திருச்சி, மதுரை, சேலம் உள்ளிட்ட பகுதிகளுக்கு இயக்கப்படும் ரயில்களிலும்அதிக அளவில் வெயிட்டிங் லிஸ்ட் இருந்து வருகிறது.

பொங்கல் பண்டிகை நெருங்க, நெருங்க காத்திருப்போர் பட்டியல் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால், பெரும்பாலானவர்களுக்கு டிக்கெட் கன்பார்ம் ஆகுமா? என்ற கவலை இப்போதே தொற்ற தொடங்கியுள்ளது. இதனால், அவர்கள் அடுத்த கட்டமாக என்ன நடவடிக்கையில் இறங்கலாம் என்று யோசித்து வருகின்றனர். ஏனென்றால் ரயிலில் தான் டிக்கெட் கட்டணம் குறைவு, குடும்பத்துடன் செல்ல சவுகரியமாக இருக்கும். பண்டிகை நாட்களில் தனியார் ஆம்னி பஸ்களில் டிக்கெட் ஜெட் வேகத்தில் அதிகரித்து விடும். ஒருவருக்கே டிக்கெட் ரூ.4000, ரூ.3000 என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கும்.

இதனால், குடும்பத்துடன் பஸ்களில் பயணம் செய்ய அதிக தொகை செலவு செய்ய வேண்டும். அது நடுத்தர மக்களால் முடியாத காரியம். இதனால் குறைந்த செலவில் பயணம் செய்யும் வகையில் அதிக அளவில் சிறப்பு ரயில்களை இயக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது. கூட்ட நெரிசல் அதிகம் உள்ள பகுதிகளில் சிறப்பு ரயில்களை இயக்க தெற்கு ரயில்வே பரிசீலித்து வருவதாக கூறப்படுகிறது. இதனால், விரைவில் சிறப்பு ரயில்களுக்கான அறிவிப்பு வெளியாகலாம் என்று பொங்கலுக்கு சொந்த ஊர்களுக்கு செல்ல திட்டமிட்டுள்ளவர்கள் ஆர்வத்துடன் காத்துள்ளனர்.



திருச்சி 36-வது வார்டு அம்கா பரத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் மாரி முத்து அவரது மனைவி, 2 மகள்கள், தாய் உள்ளிட்ட 4 பேரும் நேற்று வீடு இடிந்து விழுந்ததில் பரிதாபமாக உயிரிழந்தனர். இத்தகவலை அறிந்த பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொண்டதுடன் நிவாரண உதவி வழங்கினார். இந்த நிகழ்வின் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், காட்டூர் பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், மாமன்ற உறுப்பினர் கார்த்தி, மற்றும் அரசு உயர் அதிகாரிகள் மற்றும் பகுதி மக்கள் இருந்தனர் .

### ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசை அகற்றினால்தான்

# இந்தியாவைப் பாதுகாக்க முடியும்!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கே.பாலகிருஷ்ணன் உறுதி!

சென்னை, ஜன.2-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கை வருமாறு :-



மனித நேயம், மதச்சார்பின்மை, சமூக நீதி, நாடாளுமன்ற ஜனநாயகம், மாநில உரிமைகள் ஆகிய அனைத்தையும் கபளீகரம் செய்யும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மதவெறியை பரப்பி மக்களை கூறுபோடும் பாசிச எண்ணத்துடன் செயல்பட்டு வருகிறது. அதனை வீழ்த்தும் சாதனை மிக்க ஆண்டாக 2024 அமைந்திட வேண்டுமென்ற நம்பிக்கையோடு புத்தாண்டை வரவேற்போம்.

ஒன்றிய பாஜ அரசு மதச்சார்பற்ற ஜனநாயக கூட்டாட்சி அடித்தளம் கொண்ட அரசியல் சாசனத்தின் மீது அடுக்கடுக்கான தாக்குதல்களைத் தொடுத்திட்ட ஆண்டாகவே விடைபெறும் ஆண்டு அமைந்தது.

வகுப்புவாதம் மற்றும் கார்ப்பரேட் முதலாளிகளின் நலன் என்ற இரட்டை இலக்கோடு ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுகிறது. வறுமை, வேலையின்மை, விலை உயர்வு, பொதுத்துறை தனியார்மயம், மனுவாத கருத்தியல் பரப்பு, பாலின அடிப்படையிலான அநீதிகள், தீண்டாமை உள்ளிட்ட சாதிய சமூகக் கொடுமைகள், சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதல்கள் என ஒன்றிய பா.ஜ.க. அரசு நாட்டையே நாசம் செய்து வருகிறது.

**தமிழ்நாட்டிற்கு நிதி வழங்கவில்லை!**

தமிழ்நாட்டில் ஏற்பட்ட பேரிடர் வெள்ள சேதத்திற்கு உரிய நிவாரண நிதி கொடுக்க மறுத்து வருவது, மாநிலத்திற்கான நிதி பங்கீட்டை மறுப்பது உள்ளிட்ட பாகுபாட்டு வஞ்சக அணுகுமுறையை மேற்கொண்டு வருகிறது. பாசிச பாணி ஆர்எஸ்எஸ் அமைப்பால் வழிநடத்தப்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசை அதிகாரத்திலிருந்து அகற்றுவதன் மூலமே இந்தியாவையும், இந்திய மக்களையும் பாதுகாக்க முடியும். நாடாளுமன்றத் தேர்தலை நடப்பாண்டில் நாடு சந்திக்கவுள்ள நிலையில், மக்கள் விரோத, எதேச்சதிகார, வகுப்புவாத, வலதுசாரி பாஜ அரசை வீழ்த்துவதொன்றே இந்திய மக்களின் புத்தாண்டுச் சூளுரையாக அமைந்திட வேண்டும்.

இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கே.பாலகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### படிக்கத் தெரியாத விவசாயிகளின் நிலத்தை அபகரிக்க பா.ஜ.க. நிர்வாகி சதி!

# ஏழை விவசாயிகளுக்கு சம்மன் அனுப்பிய அமலாக்கத்துறை!

## சம்பந்தபட்ட அதிகாரிகள் மீது புகார்!

சென்னை, ஜன.2-

பிரதம மந்திரி கிஷான் திட்டத்தில் உதவி பெறும் விவசாயிகளுக்கு ‘ஜாதி’ பெயரை குறிப்பிட்டு சட்டவிரோத பணம் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் சம்மன் அனுப்பிய அமலாக்கத்துறை அதிகாரிகள் மீது டிஜிபியிடம் அளித்த புகாரின் மீது நுங்கம்பாக்கம் போலீசார் தனது விசாரணையை நேற்று தொடங்கினர்.

முதற்கட்டமாக விவசாயிகள் தரப்பு வழக்கறிஞர் பிரவினாவிடம் போலீசார் விசாரணை நடத்தினர். சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே ராமநாயக்கன் பாளையம் பகுதியில் 10 ஏக்கர் காலனி வடக்கு காடு என்று அழைக்ககூடிய காராமணி பகுதியை சேர்ந்தவர் சின்னையா. இவருக்கு கண்ணையன் மற்றும் கிருஷ்ணன் என்ற 2 மகன்கள் உள்ளனர். சின்னையா இறப்பதற்கு முன்பு 6.5 ஏக்கர் விளை நிலத்தை விலைக்கு வாங்கியுள்ளார். நிலம் தற்போது மகன்களான கண்ணையன் மற்றும் கிருஷ்ணன் கட்டுப்பாட்டில் உள்ளது.

இதற்கிடையே சேலம் இருப்பாலை பகுதியை சேர்ந்த பா.ஜ.க. சேலம் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் குணசேகரன், கண்ணையன் மற்றும் அவரது சகோதரன் கிருஷ்ணனுக்கு சொந்தமான 6.5 ஏக்கர் நிலத்தை வாங்க முயற்சி செய்துள்ளார். ஆனால், நிலம் தனது தந்தை சின்னையா வாங்கியது என்பதால் அவரது ஞாபகமாக யாருக்கும் விற்பனை செய்ய மாட்டோம் என்று கூறி சகோதரர்கள் மறுத்துவிட்டனர். ஆனால் பா.ஜ.க. நிர்வாகி குணசேகரன், படிப்பறிவு இல்லாத ஏழைகளான கண்ணையன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் நிலத்தை விற்பனை செய்ய முன்பணமாக ரூ.1 லட்சம் பெற்றதாக போலியாக ஒரு பத்திரம் தயாரித்து, அதன் மூலம் அவர்களின் 6.5 ஏக்கர் நிலத்தை அபகரிக்க முயற்சி செய்துள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த கண்ணையன் மற்றும் அவரது சகோதரர் கிருஷ்ணன் ஆகியோர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். எனினும் குணசேகரன் தொடர்ந்து அடியாட்களை வைத்து ஏழை சகோதரர்களை மிட்டியும், அவர்கள் 6.5 ஏக்கர் நிலத்தை பயிர் செய்யாதபடி தடுத்தும் வருவதாக கூறப்படுகிறது. இந்நிலையில் கடந்த ஜூன் 22ம் தேதி கண்ணையன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோருக்கு சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் இருந்து சம்மன் ஒன்று பதிவு தபால் மூலம் வந்தது. ஒன்றிய அரசின் அமலாக்கத்துறை அலுவலகத்தில் இருந்து சம்மன் அனுப்பும் வகையில் நாங்கள் எந்த தவறும் செய்யவில்லையே என்று அதிர்ச்சி அடைந்த இருவரும் தங்களுக்கு தெரிந்த பெண் வழக்கறிஞர் பிரவினாவை அணுகினர். அவர் அதை பார்த்தபோது, அதில் ‘திரு.கண்ணன், ‘இந்து - பள்ளர்’ என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் ‘பள்ளர்’ என்ற ஜாதி பெயர் ‘தேவேந்திர குல வேளாளர்’ என்று மாற்றப்பட்டு 2 ஆண்டுகள் ஆன நிலையில், ஒன்றிய அரசு எப்படி பள்ளர் என்று ஜாதி பெயரை குறிப்பிட்டிருந்தது. மேலும், அமலாக்கத்துறை அனுப்பிய சம்மனில் கண்ணையா மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் ‘சட்டவிரோத பணம் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் உங்களிடம் விசாரணை செய்ய வேண்டும். எனவே விசாரணைக்காக வரும் ஜூலை 5ம் தேதி சென்னையில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்திற்கு ஆஜராக வேண்டும். நேரில் ஆஜராகவில்லை என்றால், சட்டவிரோத பணம் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் இருவருக்கும் சொந்தமான 6.5 ஏக்கர் நிலத்தை நாங்கள் ஜப்தி செய்வோம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரதமர் ஏழை விவசாயிகளுக்கு வழங்கும் ரூ.6 ஆயிரத்தை நம்பி வசித்து வரும் விவசாயிகளுக்கு எப்படி சட்டவிரோத பணம் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் சம்மன் அனுப்பப்பட்டது என்று வழக்கறிஞர் பிரவினா அதிர்ச்சியடைந்தார். அதைதொடர்ந்து 2 விவசாயிகளுடன் கடந்த ஜூலை 5ம் தேதி சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் வழக்கறிஞர் பிரவினா ஆஜரானார். அப்போது விவசாயிகளான கண்ணையன், கிருஷ்ணன் ஆகியோரை மட்டுமே உள்ளே விசாரணைக்கு வரவேண்டும். உடன் யாரும் வரக்கூடாது என்று கூறி, வழக்கறிஞர் பிரவினாவை அதிகாரிகள் உள்ளே அனுமதிக்கவில்லை.

படிக்க தெரியாத விவசாயிகளின் வழக்கறிஞராகவே தான் நான் உடன் வந்தேன் என்று கூறி, விசாரணைக்கு தன்னை அனுமதிக்க கோரி பெண் வழக்கறிஞர் பிரவினா பல முறை வாதாடியும் அதிகாரிகள் ஏற்கவில்லை. பின்னர் கண்ணையன், கிருஷ்ணன் ஆகிய 2 விவசாயிகளும் வழக்கறிஞர் பிரவினா மூலம் பெயருக்கு பின்னால் ஜாதி பெயரை குறிப்பிட்டும், கிருஷ்ணன் தனது வங்கி கணக்கில் ரூ.500 மட்டுமே இருப்பு வைத்துள்ள நிலையில், அவருக்கு சட்டவிரோத பணம் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் எப்படி அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியது. விவசாயி கிருஷ்ணன் ஒன்றிய அரசின் 5 ஏக்கருக்கு கீழ் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் நிதி உதவி பெறும் நபராக உள்ளார். ரேஷன் கடைகளில் தான் அரிசி வாங்கி சமைத்து சாப்பிட்டு வருகிறார்.

அப்படி இருக்கும் போது, எந்த அடிப்படையில்ஏழைவிவசாயிகளுக்கு அமலாக்கத்துறை அதிகாரிகள் சம்மன் அனுப்பினர். பா.ஜ.க. பிரமுகர் குணசேகரன் 6.5 ஏக்கர் நிலத்தை தனக்கு விற்பனை செய்ய வேண்டும் என்று மிரட்டி வரும் நிலையில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சம்மன் அனுப்பியுள்ளதால், பா.ஜ.க. வின் முக்கிய பிரமுகர்கள் அமலாக்கத்துறை அதிகாரிகளின் பின்னணியில் இருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது. எனவே சம்மன் அனுப்பிய, அமலாக்கத்துறை உதவி இயக்குநர் ரித்தேஷ் குமார் மற்றும் அதிகாரிகள் பிரபா, சந்திரன் உள்ளிட்டோர் மீது சட்டப்படி வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் அளித்தார்.

அந்த புகாரின் மீது விசாரணை நடத்த டிஜிபி சங்கர் ஜிவால் அமலாக்கத்துறை அலுவலகம் அமைந்துள்ள நுங்கம்பாக்கம் காவல் நிலையத்திற்கு உத்தரவிட்டார். அதன்படி, நுங்கம்பாக்கம் போலீசார், ஏழை மற்றும் எளிய படிக்க தெரியாத விவசாயிகளான கண்ணையன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோருக்கு, எந்த அடிப்படையில் ‘சட்டவிரோத பணம் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியது? விவசாயிக்கு ஜாதி பெயரை குறிப்பிட்டு ஏன் சம்மன் அனுப்ப வேண்டும் என்பது குறித்து விசாரணையை நேற்று தொடங்கினர்.

முதற்கட்டமாக நுங்கம்பாக்கம் போலீசார் 2 விவசாயிகளுக்கு ஆதரவாக புகார் அளித்த பெண் வழக்கறிஞரான பிரவினாவிற்கு அனுப்பப்பட்ட சம்மனை தொடர்ந்து, அவரிடம் நேற்று மாலை நுங்கம்பாக்கம் போலீசார் விசாரணை நடத்தினர். இந்த விசாரணையின் போது, வழக்கறிஞர் பிரவினா ஏழை விவசாயி களுக்கு ஜாதி பெயரை கூறி அமலாக்கத்துறை அனுப்பிய சம்மன் கடிதம் உள்ளிட்ட ஆவணங்களை போலீசாரிடம் அளித்து, அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார். அதை தொடர்ந்து ஓரிரு நாளில் விவசாயி களுக்கு சம்மன் அனுப்பிய அமலாக்கத்துறை அதிகாரிகளை நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கும்படி சம்மன் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.



அருப்புக்கோட்டை பாலையம்பட்டி அருகே வாறுகால் சிறுபேழை பாலம் மற்றும் தடுப்புச்சுவர் கட்டும் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் கலந்து கொண்டார் .





திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்த கனமழையினால் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயவிலை கடைமூலம் கடந்த இரண்டு நாட்களாக நிவாரண நிதி வழங்கப்பட்டு வருகிறது. அது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அரசு அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சிலம்பரசன், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் ஆகியோர் உள்ளனர்.

### நெல்லை மாவட்டத்தில்

# ரூ.150 கோடி வெள்ள நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளது!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தகவல்!

நெல்லை, ஜன. 2 -

நெல்லை மாவட்டத்தில் கனமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபாய் 220 கோடியில் 150 கோடி ரூபாய் கடந்த இரண்டு நாட்களாக நிவாரணத் தொகை நியாய விலை கடைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்திதுறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தெரிவித்தார்.

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் தமிழ்நாடு அரசு மழை வெள்ள பாதிப்புகளுக்கு அறிவிக்கப் பட்டுள்ள நிவாரணத் தொகை வழங்கி வருவது தொடர்பாக அரசு அதிகாரிகளுடான ஆலோசனைக் கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்திதுறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப.கார்த்திகேயன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாவட்டத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகை தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் கார்த்திகேயன் அமைச்சருக்கு விளக்கம் அளித்தார். இதனை தொடர்ந்து அடுத்தகட்ட நடைவடிக்கை தொடர்பாக அனைத்து துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், பாளைசட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சிலம்பரசன் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதன் பின்னர் நெல்லை மாவட்டம் சேரன்மகாதேவி வட்டத்திற்கு உட்பட்ட சேரன்மகாதேவி, புதுக்குடி, கூனியூர் ஆகிய ஊர்களில் நிவாரண உதவி தொகை வழங்கும் பணியினை நியாய விலை கடைகளுக்குச் சென்று அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு மேற்கொண்டார். அப்போது பொதுமக்களுக்கு ரூபாய் 6000ம் மற்றும் 5 கிலோ அரிசி ஆகிய பொருட்களையும் வழங்கினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கடுமையான பெருமழையால் பாதிப்படைந்துள்ள தாமிரபரணி நதிக்கரை வட்டங்களான அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை ஆகிய நான்கு வட்டங்களில் வசிக்கும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அதிக பாதிப்படைந்த வருவாய் கிராமங்களில் வசிக்கும் குடும்ப அட்டைதார்களுக்கும் நிவாரணத் தொகை தலா ரூபாய் 6,000ம் வீதமும் மாவட்டத்தில் உள்ள ஏனைய கிராமங்கள் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு நிவாரணத் தொகை தலா ரூ. 1000ம் வீதமும் வழங்கப்படும் என அரசாணை பிறப்பிக்கப்பட்டு நிவாரணத்தொகை வழங்கும் பணி தொடங்கி நடந்து வருகிறது.

நெல்லை மாவட்டத்தில் 840 நியாயவிலைக்கடைகள் மூலம் 5,04,357 குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது.இதில் குறிப்பாக 3,40,552 குடும்ப அட்டைதார்களுக்கு ரூபாய் 6000, 1,63,705 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூபாய் 1000 மும் வழங்கப்படுகிறது. இதில் 2,32,379 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூபாய் 6000 மும், 1,04,025 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூபாய் 1000மும் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்திற்கு நிவாரண நிதி வழங்குவதற்காக ரூபாய் 220 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை இரண்டு நாட்களில் ரூபாய் 150 கோடி நிவாரண நிதி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை ஆனாலும் இன்று விடுமுறை என்ற போதிலும் பணியாளர்கள் மூலம் நிவாரணம் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்றைய தினம் புத்தாண்டு என்ற காரணத்தினால் விடுமுறை விடப்பட்டுள்ளது. நாளை (2ம் தேதி) முதல் நிவாரணம் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெறும். எவ்வித பாகுபாடும் இன்றி அனைத்து விதமான குடும்ப அட்டைதார்களுக்கும் தமிழக அரசு அறிவித்துள்ள நிவாரணத் தொகை கட்டாயம் வழங்கப்படும். புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்தவர் களுக்கும் நிவாரண வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குடும்ப அட்டை இல்லாதவர்கள் குறித்த கணக்கெடுப்பு பணி நடந்து வருகிறது. அவர்களுக்கும் தமிழக அரசின் மூலம் நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படும். நியாய விலைக் கடைகள் நிவாரணம் பெறும் போது வைக்கப்படும் கைரேகை பதிவாகாத முதியவர்கள், உடல்நலம் குன்றியவர்கள் குறித்து கணக்கெடுக்கும் பணி நடத்தப்பட்டு வருகிறது. அவர்களுக்கும் முறையாக அரசின் நிவாரணம் சென்று சேரும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்.

### தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில்

# 14 நாட்களுக்குப் பின்னர் மின் உற்பத்தி!

தூத்துக்குடி, ஜன.2-

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் வெள்ள நீர் புகுந்ததால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்ட நிலையில் 14 நாட்களுக்குப் பின் தற்போது 5வது அலகில் மின் உற்பத்தி நேற்று முதல் தொடங்கியது. தமிழக அரசுக்கு சொந்தமான அனல் மின் நிலையம் தூத்துக்குடி தெர்மல்நகர் பகுதியில் செயல்பட்டு வருகிறது. இந்த அனல் மின் நிலையத்தில் தலா 210 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட 5 யூனிட்களில் இருந்து சுமார் ஆயிரத்து 50 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த 17 மற்றும் 18ம் தேதி ஆகிய 2 நாள்களில் பெய்த கனமழை காரணமாக, மின் நிலைய வளாகத்தில் வெள்ள நீர் சூழ்ந்தது.

இதைத்தொடர்ந்து மின் நிலையத்தில் உள்ள 5 யூனிட்களிலும் மின் உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. தொடர்ந்து மழை நீரை அகற்றும் பணி நடைபெற்று வந்தததது. அதுபோல் மின் உற்பத்தியை தொடங்குவதற்காக அனைத்து பணிகளும் நடைபெற்று வந்தன. 18ம் தேதியில் இருந்து 5 மின் உற்பத்தி யூனிட்டுகளும் இயங்காமல் இருந்து வந்தன.

தற்போது, 14 நாட்களுக்கு பின்னர் 5வது யூனிட் மட்டும் சரி செய்யப்பட்டு நேற்று மின் உற்பத்தி துவங்கியது. இதில் 210 மெகாவாட் மின் உற்பத்தி நடந்து வருகிறது. மற்ற 4 யூனிட்களையும் சரிசெய்யும் பணி நடைபெற்றுவருவதாக அனல் மின் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# டிசம்பர் மாதத்தில் ஜி.எஸ்.டி. வசூல் ரூ.1.64 லட்சம் கோடி!

புதுடெல்லி, ஜன.2

இந்தியாவில் கடந்த 2017ம் ஆண்டு ஜூலை 1 முதல் ஜி.எஸ்.டி. என்னும் சரக்கு, சேவை வரி விதிப்பு முறை அமலில் உள்ளது.

இந்நிலையில், டிசம்பர் மாதத்தில் ஜி.எஸ்.டி. வசூல் ரூ.1.64 லட்சம் கோடியை எட்டியுள்ளதாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

டிசம்பர் மாத ஜி.எஸ்.டி. வருவாய் தொடர்பான விவரங்களை மத்திய நிதியமைச்சகம் நேற்று வெளியிட்டது.

கடந்த டிசம்பர் மாதத்தில், ரூ.1 லட்சத்து 64 ஆயிரத்து 882 கோடி ஜி.எஸ்.டி. வசூல் ஆகி இருப்பதாக மத்திய நிதி அமைச்சகம் கூறியுள்ளது.

கடந்த 2022ம் ஆண்டு இதே டிசம்பர் மாதத்தில் ரூ.1 லட்சத்து 49 ஆயிரத்து 507 கோடி மட்டுமே வசூலாகி இருந்தது. அதனுடன் ஒப்பிடுகையில், இது 10 சதவீதம் அதிகம் ஆகும்.

கடந்த நவம்பர் மாதம் வசூலான ரூ.1 லட்சத்து 68 ஆயிரம் கோடியுடன் ஒப்பிடுகையில், டிசம்பர் மாத வசூல் குறைவு ஆகும்.

2023–24ம் நிதியாண்டில் மொத்த ஜி.எஸ்.டி. வசூல் 7வது முறையாக ரூ.1.60 லட்சம் கோடியைக் கடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.







# கழகமும், கலைஞரும்...

# பழமைக்கு எதிராக உருவாக்கிய நவீனம்!



■ நீரை.மகேந்திரன்

‘கலைஞர் உத்தி’ என்கிற ஒரு கோட்பாடு உள்ளது. கழகமும் கலைஞரும் நிகழ்த்திய புரட்சிகளில் அந்தக் கோட்பாடு பல மாயப் பணிகளைச் செய்தது எனக் கருதுகிறேன்.

உதாரணமாக வள்ளுவத்தைப் பார்க்கலாம். வள்ளுவம் இன்று கொண்டாடப்படும் சூழலுக்கு வித்திட்டவர் கலைஞர்தான் என கடந்த வாரம் தொட்டுக் காட்டியிருந்தோம். அதன் வரலாற்றைப் பார்க்கலாம். வள்ளுவத்தைத் தமிழறிஞர்கள் பலர் உயர்த்திப் பிடித்தாலும், வள்ளுவரின் உருவம் எப்படி இருக்கும் என்பதற்குப் பல குழப்பங்கள் இருந்தன.

தற்போது நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் திருவள்ளுவர் படத்துக்குத் தொடக்கம் 1959 ஆம் ஆண்டு. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் செம்மையான முறையில் திருவள்ளுவர் ஓவியத்தை வரைய வேண்டும் என எண்ணம் கொண்டு ஓவியர் கே.ஆர்.வேணுகோபால் சர்மா மூலமாக வரைகிறார். அந்தப் படத்தைத் தமிழறிஞர்கள் பார்த்து, பேரறிஞர் அண்ணா, காமராஜர், ஜீவா, கலைஞர், கண்ணதாசன், நாவலர், பேராசிரியர் என எல்லோரும் பார்த்து ஏற்றுக் கொள்கின்றனர்.

அந்தப் படத்தைச் சட்டமன்றத்தில் வைக்க வேண்டும் எனக் குரல் கொடுத்தவர் கலைஞர். அதன் பின்னர் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் பேருந்துகளில் அந்தப் படத்துடன் திருக்குறளை எழுதி வைக்கவும் ஏற்பாடு செய்கிறார். கடற்கரையில் வள்ளுவர் சிலை, கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை, வள்ளுவர் கோட்டம் என வள்ளுவத்தைத் தமிழர் முன் கொண்டு சென்றது கழகமும் கலைஞரும்தான்.

1972 ஆம் ஆண்டு திருவள்ளுவர் ஆண்டை அறிமுகம் செய்கிறார். அதனோடு இணையாக 2008 ஆம் ஆண்டில், தை மாத முதல் நாளை ‘தமிழருக்கான புத்தாண்டு’ என அறிவிக்கிறார். தமிழறிஞர்களால் நிகழ்த்திக் காட்ட முடியாத பெருமையை கலைஞர் தனது சாமர்த்தியத்தால் நிகழ்த்துகிறார்.

‘திருவள்ளுவர்தான் தமிழர்களின் முதல் தலைவர்’ என்று கூறினார் பாரதிதாசன். அதற்கேற்ப வள்ளுவரை வீட்டுக்கு வீடு கொண்டு செல்லும் பணியை நிகழ்த்திக் காட்டினார் கலைஞர் . வள்ளுவத்தை உயர்த்திப் பிடித்ததும், தமிழ்ப் புத்தாண்டு குறித்து அறிவித்ததும் எதற்காக எனில், “மக்கள் மத்தியில் நிலவி இருந்த, இருக்கின்ற ஆரிய, புராண குப்பைகள், குழப்பங்களை அகற்ற” என வள்ளுவத்தை மாற்றாக முன் வைக்கிறார்.

ஆனால், தமிழர் புத்தாண்டு குறித்த கலைஞர் கண்ணோட்டத்துடன் முரண்பட்ட அம்மையார் ஜெயலலிதா, ஆரியப் பண்பாட்டுடன் தொடர்புடைய சித்திரையையே தமிழ் ஆண்டாகத் தொடரும் என அறிவித்தார். அப்போது கலைஞர் எழுதிய கடிதங்கள் பல வரலாற்றைத் தொட்டுக் காட்டும்.

ஆய்வுகள், மக்கள் ஏற்கும் சூழல், அறிவியல் கலந்த பார்வை ஆகியவற்றை உள்வாங்கித்தான் அவர் பண்பாட்டு நடவடிக்கைகளில் மாற்றுச் சிந்தனைகளைப் புகுத்தினார். அதற்காக கிடைக்கும் எந்த ஒரு வாய்ப்பையும் அவர் தவற விட்டதில்லை. அவர் எதையும் நீக்கவில்லை, எதையும் புறக்கணிக்கவில்லை. ஆனால், புதிய ஒன்றை உருவாக்குபவராக இருந்தார்.

## தமிழிலக்கியமும் கலைஞரும்...

கழகம் தோன்றியபோது, பகுத்தறிவு, சுயமரியாதை, சமூகநீதிக் கொள்கைகளை உயர்த்திப் பிடித்தாலும், தமிழிலக்கிய அறிவையும் கொண்டே எழுந்தது. நமது முன்னோடிகளின் பேச்சும் எழுத்தும் மொழி ஆளுமையும் மக்கள் மத்தியில் பெரும் தாக்கம் செலுத்துகின்றன.

தமிழிலக்கியம் சமூகச் சீர்திருத்தப் பிரச்சாரக் கருவியாக மாறுகிறது. 1948 ஆம் ஆண்டு முதல், 1963 ஆம் ஆண்டு வரை கழகத்தினர் நடத்தி வந்த இதழ்களின் எண்ணிக்கை 200-க்கு அதிகமாக இருந்தன. நூற்பதிப்பில் காட்டிய வேகம் அதிகம் என்கின்றன ஆய்வுகள்.

**தமிழ்நாட்டில் கலைஞரின்-கழகத்தின் பண்பாட்டுப் பணிகளும் அப்படித்தான், அவை தனியாக உருவம் கொள்பவை அல்ல. அவற்றுக்குள் கழகமும், கலைஞரும் நிகழ்த்திய பணிகளைக் காலம் மறுக்க முடியாது.**

பேரறிஞர் அண்ணாவின் சொற்களில் சொல்வதெனில் “இலக்கிய ஏடுகள் மக்கள் மத்தியில் மலிந்து நடமாட வேண்டுமானால், இலக்கியம் கோபுர உச்சியில் இருந்து குப்பை மேட்டுக்கு வரத் தயாராக இருக்க வேண்டும்’’ எனக் குறிப்பிடுவார். இன்று இலக்கியமும் ஏடுகளும் எழுத்தும் வெளியெங்கும் நிறைந்திருப்பதற்கு தி.மு.கழக முன்னோடிகளின் இடையறாத பணியில்லாமல் சாத்தியமாகி இருக்காது என்பதை நான் நம்புகிறேன்.

கலைஞரின் பண்பாட்டு நடவடிக்கைகள் பலவும், நாகரிக சமூகத்தின் வாழ்க்கை முறையாக மாற்றம் கண்டிருப்பதைக் காணலாம். ‘பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு’, ‘கை ரிக்‌ஷா ஒழிப்பு’ தொடங்கி, ‘திருநங்கைகளின் நல்வாழ்வு’ வரை எண்ணற்றச் செயல்கள் யாவும், பண்பாட்டுப் புரட்சியின் தன்மை கொண்டவை.

நகர்ப்புறங்களின் வளர்ச்சி, கிராமப்புற மேம்பாடு, பொதுக் கல்வி, பொதுச் சுகாதாரம், பெண் உரிமை எனப் பலவும் தமிழ்நாட்டில் பண்பாட்டு மாற்றங்களை நிகழ்த்தியவைதான்.

எதிர்காலம் தகவல் தொழில்நுட்பத்தில்தான் இருக்கிறது என அவர் காட்டிய முனைப்புதான் நமது வளர்ச்சி வேகத்தின் காரணி என்பதை மறுக்க முடியாது.

பொருளாதார சமூகத்தளங்களில் அவர் முன்வைத்த நவீன பார்வைதான் நாகரிக தமிழ்நாட்டின் எதிர்காலத்தை முன் அறிவிக்கிறது.

1970 ஆம் ஆண்டு, நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வருகிறார். 5 பேர் கொண்ட குடும்பம் அதிகபட்சமாக 15 ஏக்கர் நிலம் மட்டுமே சொந்தமாக வைத்திருக்க முடியும் எனச் சட்டம் கொண்டு வருகிறார். அந்தச் சட்டத்தின் மூலம் ஒரு இலட்சத்து 78 ஆயிரம் ஏக்கர் உபரி நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, சுமார் ஒரு இலட்சத்து 37 ஆயிரம் நிலமற்ற விவசாயிகளுக்குப் பிரித்து அளிக்கப்பட்டதாகப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

அந்த நிலங்களின் பட்டாக்களை இப்போது மக்கள், ‘கலைஞர் பட்டா’ என்று அழைக்கின்றனர். நிலமற்றவர்களுக்கு நில உரிமையைப் பகிர்ந்து அளித்த அந்த சட்டம் மூலம் மக்கள் வாழ்க்கைத் தரத்தை மட்டுமல்ல, கலாசார மாற்றங்களையும் நிகழ்த்திக் காட்டியவர்.

இரண்டாயிரமாண்டு நெருக்கத்தில் ‘சமத்துவபுரம்’ எனப் புதிய ஊர் உருவாக்கத்தை அவர் சிந்தனை முன்வைக்கிறது. ‘பெண்களுக்கான சொத்துரிமை’, ‘பொது விநியோகத்தில் ஒரு ரூபாய்க்கு அரிசி விலை’, ‘சமையல் எரிவாயு அடுப்பு’ என அவர் செயல்படுத்திய திட்டங்கள் அனைத்தும் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் மாற்றங்களை உருவாக்கியவை.

இலவச வண்ணத் தொலைக்காட்சி மூலம் தமிழ்நாட்டின் அடித்தள மக்கள் ஒவ்வொருவரது வீட்டிலும் தகவல் தொழில்நுட்பம் சேர்ந்தது. அதுமட்டுமல்ல, மக்களிடையே செய்திகள் தெரிந்துகொள்வதற்கான ஆர்வம் ஆகியவை பிறந்தன. இப்படியான சமூகப் புரட்சியை நிகழ்த்தியவர் கலைஞர் எனக் குறிப்பிடுகிறார் பேராசிரியர் மு. நாகநாதன்.

திராவிடச் சிந்தனையே பழமைக்கு எதிரான நவீன சிந்தனைக் கருத்தாக்கம் என இயங்கினார் தந்தை பெரியார். அதைப் பண்பாட்டு உருவாக்கமாக முன்வைத்தார் பேரறிஞர் அண்ணா. அந்தத் திராவிடப் பண்பாட்டினை இலக்கியம், அரசியல், மக்களின் வாழ்க்கை எனப் பல தளங்களிலும் விதைத்தவராக கலைஞர் நிற்கிறார்.

கழகத்தின் பணிகள், கலைஞரின் பணிகள் எனத் தொட்டு எழுதினாலும் அவை, தனியாக உருவம் கொள்ளாதவையாக உள்ளன. கலைஞரின் எழுத்துகள் குறித்து, பேராசிரியர் அவர்கள் ஒரு இடத்தில் குறிப்பிடுவதுபோல, “கலைஞர் தனது வரலாறு என நினைத்து எழுதினாலும், அவை தமிழ்நாட்டின் வரலாறு, மொழியின் வரலாறாக இருக்கிறது. அவருடைய வரலாறு தனி வரலாறாக இருக்கமுடியாத நிலை உருவாகிவிட்டது’’ என்கிறார்.

தமிழ்நாட்டில் கலைஞரின்-கழகத்தின் பண்பாட்டுப் பணிகளும் அப்படித்தான், அவை தனியாக உருவம் கொள்பவை அல்ல. அவற்றுக்குள் கழகமும், கலைஞரும் நிகழ்த்திய பணிகளைக் காலம் மறுக்க முடியாது.

## திராவிட இயக்க இதழ்கள் -‘தமிழ்த்தென்றல்’




விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த வி.வி.ராமசாமி என்பவர் சுயமரியாதை இயக்கத்தின் நிறுவனத் தலைவர்களில் ஒருவர். தந்தை பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர். தனது திருமணத்தின் போது, புரோகிதர்களை மறுத்து, சுயமரியாதை வழி மணம் செய்து கொண்டார். அவரே ஆசிரியராக இருந்து தொடங்கிய இதழ் இது.

1947 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த இதழின், முதலாமாண்டு மலர்தான் படத்தில் காண்பது. ‘முத்தமிழ்ச் சித்திரமலர்’ என்ற வாசகத்துடன் வெளிவந்த இந்தச் சிறப்பு மலர் தந்தை பெரியார், ஞானசவுந்தரி, தெ.பொ.மீனாட்சிசுந்தரம், ரசிகமணி டி.கே.சி, கி.ஆ.பெ.விசுவநாதம், ரா.பி.சேதுப்பிள்ளை, டி.கே.சண்முகம், கோவைக் கிழார் போன்ற தமிழறிஞர்களின் படைப்புகளுடன் வெளிவந்துள்ளது.

ஒவ்வொரு பக்கத்திலும் தமிழ் எண்களே பக்க எண்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. 204 பக்கம் கொண்ட இந்தச் சிறப்பிதழ், சுத்தானந்த பாரதியாரின் தமிழ் வாழ்த்துடன் தொடங்குகிறது.

## :ப்ளாஷ்பேக்





## வேலி போட்டார்!



சுரேஷ்

1990 ஆம் ஆண்டு, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியின் வெள்ளி விழாவை முன்னிட்டு நம் தலைவர் அன்றைய முதல்வர் கலைஞர் விழாவை சிறப்பிக்க வருகை தந்திருந்தார். அப்போது கல்லூரியில் நான் மாணவர் தலைவராக இருந்தேன். விழாவில் எனக்குப் பேச வாய்ப்பு கிடைத்ததும் கலைஞரிடம், ‘எங்கள் கல்லூரிக்கு வேலி (காம்பவுண்ட்) அமைத்துத் தாருங்கள்’ என்று கோரிக்கை வைத்தேன். கலைஞர் தனது உரையின்போது அவருக்கே உரிய நகைச்சுவை உணர்வோடு, “ஊருக்கே வேலி (திருநெல்வேலி) இருக்கிறதே, கல்லூரிக்கு எதற்கு என்று விட்டுவிட்டார்கள் போலும்” என்றார். கேட்டதற்கு இணங்கச் செய்தும் கொடுத்தார்.

**-டாக்டர். சுரேஷ், நாகர்கோவில்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி :அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### திராவிட நாட்டில் கலைஞரின் முதல் படைப்பு

**1942-இல் திராவிட நாடு ஏட்டை அண்ணா தொடங்கினார். அண்ணாவின் வீரியமிக்க எழுத்துக்களால் ‘திராவிட நாடு’ இதழ் இளைஞர்களால் அதிகம் ஈர்க்கப்பட்டது. அந்த ஆண்டில் பள்ளி இறுதி வகுப்பு மாணவராக இருந்த கலைஞர் “இளமைப்பலி” என்ற கட்டுரையை திராவிட நாடு ஏட்டுக்கு அனுப்பி வைத்து, 3 அல்லது 4-வது இதழிலேயே பிரசுரமானதால் மிகப்பெரிய அளவில் மகிழ்ச்சிகொண்டார். அப்போது அன்பழகன், நாவலர், பாரதிதாசன் போன்றோரின் படைப்புகள் கூட திராவிட நாடு ஏட்டில் இடம்பெற்றிருக்கவில்லை.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 347




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131